2022 ஆம் ஆண்டுக்கான நில அளவையாளர் நாயகத்தின் செயலாற்றுகை அறிக்கை
இலங்கை நில அளவைத் திணைக்களம்

செலவினத் தலைப்பு இல - 288

உள்ளடக்கம்

பக்கம்

1.0 நிறுவனத்தின் சுயவிபரக் கோவை

1.1 அறிமுகம் 29

1.2 நோக்கு, செயற்பணி, நோக்கங்கள் 31

1.3 அடிப்படைச் செயற்பாடுகள் 32

1.4 நிறுவனத்தின் கட்டமைப்பு 34

1.5 திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள் 35

2.0 முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்குகள் 36

3.0 ஆண்டுக்கான மொத்த நிதிச் செயலாற்றுகை 38

4.0 செயலாற்றுகைச் சுட்டிகள் 45

5.0 நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை 47

6.0 மனித வள விபரக்குறிப்பு 48

7.0 இணக்கப்பாட்டு அறிக்கை 53

8.0 முடிவுரை 59

9.0 இணைப்புகள்

i நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் (பக்கங்கள் i-xxiv)

ii கள அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் (பக்கங்கள் i-xi)

iii தியத்தலாவ அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம் (பக்கங்கள் i-ii)

iv கணக்கு தணிக்கை அறிக்கை (தயவுசெய்து சிங்களப் பதிப்பின் இணைப்பு iv இனை பார்க்கவும்)

1.0 நிறுவனத்தின் சுயவிபரக் கோவை

1.1 அறிமுகம்

கிரேக்க இனத்தவரான குளோடியஸ் தொலமியினால் கி.பி. 139 ஆம் ஆண்டு அல்லது அதற்கு அண்மித்த காலப் பகுதியில் வரைபடமாக வரையப்பட்டுள்ள இலங்கையானது பழங்காலத்தில் தப்ரபேன், செரன்டிப் என பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டதுடன், இந்நாட்டிற்கே உரித்தான மாணிக்கக் கற்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் உயிர் பல்வகைமை காரணமாக உலக வரைபடத்தில் பெருப்பித்துக் காட்டியதன் மூலம் அப்பொழுது இலங்கையின் அமைவிடத்தின் முக்கியத்துவம் எந்த அளவிற்குரியது என்பது விளங்குகின்றது. விவசாய செழுமை காரணமாக கீழைத்தேய தானியக் களஞ்சியம், இந்து சமுத்திரத்தின் முத்து எனவும் அழைக்கப்பட்ட எமது தாய் நாட்டின் முதலாவது அரச திணைக்களமாக நில அளவைத் திணைக்களம் கி.பி. 1800 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி காலி நகரில் நிறுவப்பட்டதுடன் திரு. ஜோசப் ஜோன்வில் அவர்கள் அதன் முதலாவது நில அளவையாளர் நாயகம் ஆவார். இந்நாட்டின் போக்குவரத்து, நிர்வாகம் மற்றும் காணி உபயோகத்திற்கு அவசியமான அளவையியல் பணிகளை முன்னெடுப்பதானது ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் நில அளவைத் திணைக்களத்தின் வகிபாகமாக இருந்ததுடன் அப்பொழுது நிலவிய குறைந்த வசதிகளின் கீழும் மிகவும் திருத்தமாக அளவீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளதாக பழைய ஆவணங்களைப் பரிசீலிக்கும் போது உறுதியாகின்றது.

222 ஆண்டுகளாக காலத்திற்குக் காலம் மாற்றமடைந்த தொழில்நுட்ப செயற்பாடுகளின் மூலம் பரிபூரணமான நில அளவைத் திணைக்களமானது தேசிய அளவீடுகள் மற்றும் வரைபட முகவர் நிறுவனமாக செயற்பட்டு இலங்கையில் அனைத்து அளவீடுகள் மற்றும் வரைபடங்களை தரநிர்ணயம் செய்தல் மற்றும் தயாரிக்கும் பொறுப்பை ஏற்று வருகின்றது. தற்பொழுது உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய உபகரணங்களைப் பயன்படுத்தி அதிக கூடிய திருத்தத்துடனான தரவுகளைப் பயன்படுத்தி இலங்கையின் நிலைபெறுதகு அபிவிருத்திக்காக நிறைவேற்றுகின்ற வகிபாகங்கள் காரணமாக "அபிவிருத்தியின் அமைதியான முன்னோடி" ஆக மாறியுள்ளதுடன் அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு அவசியமான அளவீடுகள் மற்றும் வரைபடமாக்கல் செயற்பாடுகள் மிகவும் வினைத்திறன் மற்றும் விளைத்திறன் கூடியதாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறே, இலங்கையில் பல அபிவிருத்திப் பணிகளின் போது அவசியமான புவியியல் தரவுகளை வழங்குவதில் முன்னோடியாவும் மாறி உள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிகளைப் பெற்ற பல்வேறு சேவைகளுக்குச் சொந்தமான உத்தியோகத்தர்கள் உட்பட, சுமார் ஆறாயிம் உத்தியோகத்தர்கள் நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம் உட்பட மாகாண நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம், மாவட்ட நில அளவை அலுவலகம் மற்றும் பிரதேச நில அளவை அலுவலகங்களில் சேவையாற்றி அரசாங்கத்தினதும், நாட்டு மக்களினதும் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், தியத்தலாவயில் நிறுவப்பட்டு உள்ள அளவையியலும் படமாக்கலும் நிறுவகத்தின் மூலம், திணைக்களத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுகின்ற தொழில் பயிலுனர்களுக்கு பயிற்சி வழங்கப்படுவதைப் போன்றே தற்பொழுது பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் அறிவை விருத்தி செய்து தொழில்சார் தேர்ச்சியுடன் கூடிய உத்தியோகத்தர்களை உருவாக்குதலும் நிறைவேற்றப்படுவதுடன் இதற்கு மேலாக வேறு நிறுவனங்களின் உத்தியோகத்தருக்கான நோக்கு நில பயிற்சி வகுப்புக்களும் நடத்தப்படுகின்றது.

அளவீட்டுச் சட்டத்தின் கீழ், நில அளவையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்மொழிவுத் திட்டங்களுக்காக திட்டங்களைத் தயாரிப்பதற்குரிய பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக தரவுகளைச் சேகரித்தல் மற்றும் உரிய தரப்பினர்களுக்கு விநியோகித்தல் என்பன முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய, இந்நாட்டின் தேவைகளுக்கு அமைய திட்டமிடப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக காணிகளை அளப்பதானது விசேட செயற்திட்ட அளவீடுகளின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அதற்கு மேலதிகமாக பொது மக்களுக்கு உரித்துச் சான்றிதழ்களை வெளியிடுவதற்காக "பிம்சவிய" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற அளவீடுகள், காணிகளை அளிப்பதற்கான அளவீடுகள், தொல்பொருளியல் நிலங்களைப் பாதுகாப்பதற்கு அவசியமான அளவீடுகள், அனர்த்த முகாமைத்துவம், குற்றவியல் விசாரணை நடவடிக்கைகளுக்காக முன்னெடுக்கப்படுகின்ற அளவீடுகள், நீதிமன்ற செயற்பாடுகளுக்கு அவசியமான காணிகளை அளத்தல் என பல்வேறு அளவீட்டுப் பணிகளுக்கு பங்களிப்பு வழங்கி அந்த அளவீடுகளின் செம்மையை பேணுவதற்கும் செயல்பட்டு வருகின்றது. அவ்வாறே, நிலக் கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுவதற்காக அளவீடுகளை முன்னெடுப்பதும் இலங்கை வாழ் மக்களின் கலாச்சார மரபுகளுடன் பின்னிப் பிணைந்த தேசிய ஒற்றுமைக்கு உந்துதலான திருத்தமானதும், திட்ட வட்டமான புவியியல் பெயரீடுகள் மற்றும் தரவு முறைமையை தர நிர்ணயத்திற்கு அமைய பேணிச் செல்லுதலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நில அளவைத் திணைக்களத்தின் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற மற்றுமொரு முதன்மையான செயற்பாடாக இருப்பது யாதெனில், தேசிய வரைபட தேவைகளுக்கு அமைய வரைபடங்களைத் தயாரிப்பதாகும். தேசிய வரைபடக் கையேடு, பாடசாலை வரைபடக் கையேடு, 1:50,000 மற்றும் 1: 10,000 அளவிடையிலான இட விளக்க வரைபடங்கள், ஆய்வுப் பொருள்சார் வரைபடங்கள் மற்றும் பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற விதத்தில் வரைபடங்களைத் தயாரித்தல், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அவசியமான வரைபடங்களைத் தயாரித்தல் என்பன இதற்கமைய முன்னெடுக்கப்படுகின்றன. தற்பொழுது செய்மதிப் படங்கள் மற்றும் ஏனைய தரவு மூலாதாரங்களைப் பயன்படுத்தி 1:50,000 மற்றும் 1:10,000 அளவிடையிலான புவியியல் தரவு முறைமையை நிர்மாணித்து இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லப்பட்டு வருகின்றது. அவ்வாறே, பொது மக்களின் பல்வேறு தேவைகளுக்காக அச்சிடப்பட்ட வரைபடங்கள் மற்றும் எண்மத் தரவுகளாக புவியியல் தகவல்களை வழங்குதல் மேற்கொள்ளப்படுவதுடன், அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியுமான விதத்தில் வாடிக்கையாளர் சேவை மத்திய நிலையம் ஒன்று பிரதான அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டு உள்ளது. அவ்வாறே, திணைக்கள வலைத்தளத்தின் மூலம் பரிசீலித்து தமது தேவைகளுக்கு ஏற்ப வரைபடங்களைத் தயாரித்துக் கொள்வதற்கும் மற்றும் வீட்டில் இருந்தே கட்டளையிட்டு விரைவு அஞ்சல் சேவையின் (கூரியர் சேவை) கீழ் திணைக்கள உற்பத்திகளை வீட்டிற்கே வரவழைத்துக் கொள்வதற்குமான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு உள்ளன.

திணைக்களத்தின் ஆரம்ப கால கட்டத்தில் குறைந்த வசதிகளைக் கொண்ட உபகரணங்களைப் பயன்படுத்தி அவசியமான அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டாலும், தற்பொழுது திணைக்களத்தின் நோக்கை சான்றளிப்பதற்காக உறுதுணையாக உள்ள நவீன தொழில்நுட்ப அறிவு மற்றும் நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி மற்றும் அந்தந்த துறைகளுக்கு உரிய தரவு முறைமைகள், வலைத் தளங்களை நிர்மாணித்து திணைக்களத்தின் சகல செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் என்பவற்றை வினைத்திறனாக நிறைவேற்றி வருகின்றது. அதற்கு மேலதிகமாக உத்தியோகத்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு விதங்களில் செயற்பட்டு மதக் கிரிகைகள், தொழிற் சங்கங்கள் மற்றும் பரஸ்பர உதவிச் சங்கங்களுக்காக அலுவலகத்தில் இட வசதிகளை வழங்குதல், நூலக வசதிகள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் மூலம் உத்தியோகத்தர்களின் திறமைகளை விருத்தி செய்து கொள்வதற்கு வாய்ப்புக்களை வழங்குதல் என்பன முன்னெடுக்கப்பட்டு உள்ளதுடன், திணைக்களத்தின் இசை வட்டத்தின் மூலம் கடந்த ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்ட "மெனும் கீ சார" இசை கச்சேரியானது உத்தியோகத்தர்களின் இசைத் திறமையை வெளிக் கொண்டு வருதல், ரசனையை மேம்படுத்துதலைப் போன்றே மன அமைதியை வழங்குவதற்கும் மிகவும் உறுதுணையாக இருந்தது.

திணைக்களத்தின் நல் இருப்பையும் மேம்பாட்டையும் பிரார்த்திக்கின்ற பல்வேறு சேவைகளுக்குரிய உத்தியோகத்தர்கள் சுமார் 6000 பேரிற்கு வழிகாட்டல்களை வழங்கி தற்பொழுது பணியாற்றி வருவது 53 ஆவது நில அளவையாளர் நாயகம் ஆகும்.

1.2 நோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

நோக்கு

காணித் தகவல்கள் வழங்குவதில்
என்றும் முன்னணியில் நிற்றல்

செயற்பணி

தொழில்முறை திறனுடன் கூடிய
சேவைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற குழுவினால்
பூமி பற்றிய தரமான தகவல்கள் - தயாரிப்புக்கள் மற்றும்
சேவைகளை வழங்குதல்

நோக்கங்கள்

கொழும்பு தலைமை அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள், தியத்தலாவ அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம் என்பவற்றோடு நாடளாவிய ரீதியில் பரந்துபட்டுள்ள அலுவலக வலையமைப்பின் மூலம் திணைக்களத்தின் சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளன. மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் இந்த அலுவலகங்களின் மூலம் நடைபெற்ற செயற்பாடுகள் கீழ்வரும் நோக்கங்களை இலக்காகக் கொண்டன.

- வருடாந்த நில அளவை நிகழ்ச்சித் திட்டங்கள், படமாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அளவையியலும் படமாக்கலும் நிறுவனத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துதல்.
- பதவியணிக்கு பயிற்சி வழங்குதல்.
- குறித்த ஆண்டுக்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான அசையா மற்றும் அசையும் சொத்துக்களை கட்டியெழுப்பி, பேணி வருதல்.
- நில அளவைகள் தொழிலின் தரம் தொடர்பில் நிருவகித்தல் மற்றும் அதன் தரத்தைப் பேணுதல்.
- வழங்கப்பட்ட அரசாங்க நிதியை, ஆண்டுக்குள் நிறைவு செய்ய வேண்டியிருந்த அந்தந்த நோக்கங்களுக்காக பயன்படுத்துதல்.
- திணைக்களத்தின் பதவியணியின் நன்னடத்தையைப் பேணுதல் மற்றும் நலன்புரி விடயங்கள் தொடர்பில் செயற்படுதல்.


1.3 அடிப்படைச் செயற்பாடுகள்

1. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மற்றும் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நியதிச்சட்ட நில அளவைகளை மேற்கொண்டு நன்கொடைப் பத்திரங்களை வழங்குவதற்கு கோட்டு வரைவுகளை வெளியிடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
2. அதிவேக நெடுஞ்சாலைகள், வீதிகளை விசாலமாக்குதல், விமான நிலையங்கள், துறைமுகங்களை ஆரம்பித்தல், சுற்றுலாத்துறைச் செயற்திட்டங்கள், மின் வலுச் சக்திச் செயற்திட்டங்கள் போன்ற பாரிய அபிவிருத்தி முன்மொழிவுகளுக்கான அடிப்படைத் தேவைகளான காணி அளத்தல் மற்றும் சுவீகரித்துக் கொள்வதற்கான நில அளவை நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
3. பிரதேச செயலாளர்களிடமிருந்து பல்வேறு தேவைப்பாடுகளின் கீழ் கிடைக்கப்பெறுகின்ற நில அளவைக் கோரிக்கைகளுக்கு அமைவாக நில அளவைகளை மேற்கொண்டு, உரிய நிலப்படங்களைச் சமர்ப்பித்தல்.
4. நீதிமன்றங்களின் தேவைப்பாடுகளுக்கு அமைய, நீதிமன்ற ஆணைக்குழுவின் நில அளவைகளை மேற்கொள்ளல். உரிய தட வரைபடங்களை நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் வழங்குதல்
5. உரித்துப் பதிவு செய்யும் சட்டத்திற்கு அமைய நாட்டில் அமைந்துள்ள அனைத்து அரச மற்றும் தனியார் காணிகளை பணம் அறவிடாமல் அளவைகளை மேற்கொண்டு, கடத்திரள் வரைபடங்களைத் தயாரித்து உரிமைச் சான்றிதழ்களை வெளியிடுவதற்காக காணிப் பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு வழங்கும் பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தினை நில உரிமைத் தீர்வுத் திணைக்களம் அமுல்படுத்துதல்.
6. திணைக்களத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட ஓர் அங்குலத்திற்கு ஒரு மைல் எனும் புவியியல் பண்புகளைக் கொண்ட வரைபடத் தொடரினை மறுசீரமைத்து, 1:50,000 புவியியல் பண்புகளைக் கொண்ட வரைபடத் தொடரினைத் தயாரித்தலும் , இற்றைப்படுத்தலும் , முழு நாட்டையும் உள்ளடக்கிய 1:10,000 புவியியல் பண்புகளைக் கொண்ட வரைபடத் தொடரினைத் தயாரித்தல், குறிக்கோள் மற்றும் விசேட பணிகளுக்காக வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை வெளியிடுதல்.
7. மும்மொழிகளிலும் தேசிய வரைபடக் கோவையை தயாரித்தல்.
8. திணைக்களத்தின் ஆரம்பம் முதல் தயாரித்து வந்த நிலப்படங்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பொதுமக்களின் தேவைகளுக்காக தனது காணி உரித்துக்கான நிலப்படம் ஒன்றினை விரைவாகவும் மற்றும் இலகுவாகவும் பெற்றுக்கொள்ளும் வசதியினை வழங்குதல்.
9. காணிப் பிணக்குகளைத் தீர்க்கும் சட்டத்தின் கீழ், இறுதிக் கிராம நிலப்படங்கள் மற்றும் புவியியல் பண்புசார் நிலப்படங்களைத் தயாரித்தல்.
10. திணைக்களத்தின் அலுவலர் குழாத்திற்கு உரிய பரீட்சைகளை நடாத்துதல்
11. முழு நாட்டையும் உள்ளடக்கி முறையான காணித் தகவல் முறைமை ஒன்றைத் தயாரித்தல்
12. வான்ஒளிப் படம் மற்றும் செயற்கைக்கோள் ஒளிப்படத்தைப் பயன்படுத்தி முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் புவியியல் தரவு முறைமையை உருவாக்கி, தரவு முறைமை ஒன்றைத் தயாரித்தல்.
13. 1952 - 2014 காலப்பகுதியில் திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வான்ஒளிப் ப்படங்களை வரைபடமாக்கல், அபிவிருத்தித் திட்டங்கள், நுகர்வோர் தேவைப்பாடுகள் முதலியவற்றிற்குப் பயன்படுத்தக் கூடியவகையில் வழங்குதல்.
14. ஒளி கண்டறிதல் மற்றும் அலைவரிசை தொழில்நுட்பம் [LiDAR] என்பவற்றினை இலங்கையில் அறிமுகம் செய்தல் மற்றும் அதனூடாகத் தேவையான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் வசதிகளைச் செய்து கொடுத்தல்.
15. இலங்கை மக்களின் மரபுரிமையுடன் பின்னிப்பிணைந்த தேசிய ஒற்றுமைக்கு துணை புரியும் சரியானதும், துல்லியமுமான புவியியல் பெயர்கள் மற்றும் தரப்படுத்தப்பட்ட தரவு முறைமையினூடாக அறிமுகம் செய்தல்.
16. விண்வெளிசார் தரவுகள் மற்றும் தகவல்களைப் பொதுவாகப் பயன்படுத்துதல் மற்றும் பரிமாறுதல் என்பவற்றிற்காக முறையான தேசிய செயற்றிட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் கொள்கைகளைத் தயாரிப்பதற்கு அவசியமான உதவிகளை இலங்கைத் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வழங்குதல்.

17. புவிப்பாத்துக் கட்டுப்பாட்டு வலையமைப்பு அமைத்தல் மற்றும் உலக இடங்காண் செயற்கைத் துணைக்கோள்கள் அமைப்பு (GLOBAL NAVIGATION SATELLITE SYSTEM – GNSS) தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் உயர் செம்மையுடன் அளவீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் உலக இடங்காண் செயற்கைத் துணைக்கோள்கள் அமைப்பு (GNSS) தொழில்நுட்பம் மூலம் இலங்கையின் தொடர்ச்சியான செயற்பாட்டு மாட்டேற்று நிலையம் (SRI LANKA CONTINUOUSLY OPERATING REFERENCE STATION – SLCORS) வலையமைப்பை அமைப்பதன் மூலம் புவிப்பாத்து அளவீட்டுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதை இலகுவாக்குதல்.
18. திணைக்களத்தின் கீழுள்ள நில அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனத்தின் மூலம் பட்டப்படிப்புப் பாடநெறிகள், உயர் டிப்ளோமாப் பாடநெறிகள், டிப்ளோமாப் பாடநெறிகள், சான்றிதழ் பாடநெறிகள் நடாத்துவதன் ஊடாக, திணைக்களத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைய உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு செயன்முறைப் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்.
19. உத்தியோகத்தர்களின் அறிவை விருத்தி செய்வதற்காக வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள் மற்றும் உள்நாட்டு நிறுவனங்களின் மூலம் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆற்றுப்படுத்துதல்.
20. காணி அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் என்பவற்றிற்கு உரிய விடயங்கள் தொடர்பாக அவசியப்படக்கூடிய ஆய்வுகளை நடாத்துதல்.
21. நில அளவையியல் தொழிற்றுறைக்கக்கான தரமான தேவைப்பாடுகளை முறையாக நடாத்திச் செல்லுதல்.
22. உரிமைகளைப் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் அரச நில அளவையாளர்களின் மற்றும் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் கடத்திரள் அளவையியல் தொடர்பாக நில அளவையாளரின் தேர்ச்சி தொடர்பாக அங்கீகாரச் சான்றிதல் வெளியிடுதல். காணிப் பிணக்குகளைத் தீர்க்கும் சட்டத்தின் கீழ், இறுதிக் கிராம நிலப்படங்கள் மற்றும் புவியியல் பண்புசார் நிலப்படங்களைத் தயாரித்தல்.
23. அரச நிறுவனங்களுக்கு நில அளவை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் சேவைகளை வழங்குதல்.
24. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுக்காக திணைக்களத்தின் கடமைப்பொறுப்புக்கள் மற்றும் பல்வேறு விடயங்களின் கற்கைகளுக்காக கல்விக் கருத்தரங்குகளை நடாத்துதல்.

1.4 நிறுவனத்தின் கட்டமைப்பு

நில அளவைத் திணைக்களம் -2022



மேலதிக நி.அ.நா.	- மேலதிக நில அளவையாளர் நாயகம்	ஆ.மு.தொ.தா.	- ஆணை முகாமைத்துவம் மற்றும் தொழில்சார் தரங்கள்	மு.அ.பயி	- முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவு	அ.தொ.உ.	- அச்சுக்கலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்
சி.பி.தி.நா.	- சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகம்	க.உ.	- கட்டிடமும் உபகரணமும்	வி.தி.அ.த.க.	- விசேட நில அளவை மற்றும் தரக் கட்டுப்பாட்டு	வா.ஒ.மு.தொ.உ.	- வான் ஒளிப்பட ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்
மா.நி.தா.	- மாகாண நில அளவையாளர் நாயகம்	அ.அ.	- ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி	பி.அ.கா.	- பிரதேச அளவை காரியாலயம்	வி.தொ.உ.	- விணை தொழில்நுட்ப உத்தியோகத்தர்
பி.தி.நா.	- பிரதி நில அளவையாளர் நாயகம்	வ.த.க.	- வளித் தகவல்கள் கட்டமைப்பு	த.கா.	- தலைமை காரியாலயம்	த.தொ.உ.	- தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்
சி.நி.அ.	- சிரேஷ்ட நில அளவை அத்தியட்சர்	பு.த.க.	- புவியியல் தகவல் கட்டமைப்பு	தே.வி.தா.உ.	- தேசிய விண்வெளித் தரவுகள் உட்கட்டமைப்பு	த.தொ.உ.த.	- தகவல் தொழில்நுட்ப உதவியாளர்
நி.அ.	- நில அளவை அத்தியட்சர்	வி.ஒ.அ.	- விமான ஒளிப்பட அளவைகள்	வ.தொ.உ.	- வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர்	அ.உ.தொ.	- அளவை உபகரண தொழில்நுட்பவியாளர்
தொ.நி.உ.	- தொழில்நுட்ப நிர்வாக உத்தியோகத்தர்	தொ.கோ.பி.	- தொலையுரை கோள்கள் பிரிவு	தொ.தொ.உ.	- தொலையுணர்வு தொழில்நுட்ப உத்தியோகத்தர்	அ.உ.	- அலுவலகத்தி உத்தியோகத்தர்
நி.உ.	- நிர்வாக உத்தியோகத்தர்	நி.அ.வ.தி.	- நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனம்	ஒ.தொ.உ.	- ஒளிப்படவியலாளர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்	மு.சே.உ.	- முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்
பி.தொ.நி.உ.	- பிரதி தொழில்நுட்ப நிர்வாக உத்தியோகத்தர்						

1.5 திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள்

அளவையியல் மற்றும் படமாக்கலை பிரதான வகிபாகமாகக் கொண்ட நில அளவை திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படுகின்ற பணிகளை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தில் பிரதானமான 03 பிரிவுகள் நடாத்திச் செல்லப்படுகின்றன.

1.5.1 நில அளவையாளர் நாயகம் அலுவலகம்

1.5.2 வெளிக்கள அலுவலகம்

1.5.3 அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம்

1.5.1 நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்

நில அளவைகளை மேற்கொள்வது நாடு முழுவதும் அமுல்படுத்தப்படுகின்ற களக் கடமையாக உள்ளதுடன் அதன் பூரண மேற்பார்வையானது பிரதான அலுவலகத்தின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது. படமாக்கலின் கீழ் புவியியல் பண்புகளுடன் கூடிய வரைபடங்கள் தயாரித்தல், குறிக்கோள் படங்கள் தயாரித்தல், நுகர்வோரின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப வரைபடங்களைத் தயாரித்தல் என்பன தலைமை அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்குத் தேவையான நிலத் தகவல்கள் வான் ஒளிப்படங்கள், செயற்கை கோள் ஒளிப்படங்கள் முதலியவற்றின் உதவியோடு வழங்குவதற்காக களஞ்சியப்படுத்துவதும் தலைமை அலுவலகத்திலுள்ள படமாக்கலுடன் தொடர்புடைய கிளைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற விடயங்களாகும்.

திணைக்களத்தின் செயற்பாடுகளை உகந்த முறையில் நடாத்துவதற்காக மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் பௌதீக வளங்கள் முகாமைத்துவம், திணைக்களத்திற்குத் தேவையான கட்டிடங்களை நிர்மாணித்தல் போன்ற செயற்பாடுகள் நில அளவையாளர் நாயகத்தின் அலுவலர்கள், களஞ்சியம், கட்டிடங்கள் உபகரணங்கள் எனும் பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்படும். திணைக்களத்தின் நிதி முகாமைத்துவம் மற்றும் வெளிக்கள அலுவலகங்களுக்குத் தேவையான ஒதுக்கீடு மற்றும் பணம் பெற்றுக்கொடுத்தல் என்பன தலைமை அலுவலகத்தின் கணக்குப் பிரிவின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக டிஜிட்டல் தரவினைப் பேணுதல் மனித, பௌதீக வள முகாமைத்துவகத்திற்குத் தேவையான தரவு முறைமையை நடாத்திச் செல்லுதல், அளத்தல் தொடர்பான வேண்டுகோள்களுக்கான தரவு முறைமையை நடாத்திச் செல்லுதல் முதலிய அனைத்துத் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாடல் நடவடிக்கைகள் மற்றும் இணையத்தளத்தை நடாத்திச் செல்லுதல் போன்றனவும் தலைமை அலுவலகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு உள்ளிட்ட தொழில்நுட்பப் பிரிவின் ஒருங்கிணைப்பிலேயே நடைபெறுகின்றன. திணைக்களத்தின் அனைத்து சட்ட நடவடிக்கைகளும் சட்டப் பிரிவின் மூலமே மேற்கொள்ளப்படுவதுடன் விசேட அளத்தல் நடவடிக்கைகளுக்காக தலைமை அலுவலகத்தில் விசேட அளத்தல் அலகு ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. புவிபாத்து அளவைப்பிரிவின் மூலம் அனைத்து கிடைமட்ட மற்றும் செங்குத்து நிருவாகப் புள்ளிகள் உருவாக்குதல் மற்றும் நிருவாக வலையமைப்பினை நடாத்துதல் மற்றும் மேற்பார்வை செய்யப்படுகின்றது.

*நில அளவையாளர் நாயகம் அலுவலகத்தின் மூலம் நடைபெறுகின்ற விடயங்கள் தொடர்பிலான விபரங்களை **இணைப்பு i** இல் பார்க்கவும்.*

1.5.2 வெளிக்கள அலுவலகம்

அரசாங்கத்தின் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக காணிகளை அளத்தல், பொது மக்களுக்கு காணி உரித்துரிமைப் பத்திரங்களை வழங்குவதற்கு அவசியமான அடிப்படைப் பணியாக காணிகளை அளத்தல், காணி உரிமையை நிர்ணயம் செய்வதற்காக "பிம்சவிய" செயற்திட்டத்தின் கீழ் காணிகளை அளத்தல், பிணக்கங்கள் நிலவுகின்ற சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்படுகின்ற உத்தரவுகளின் அடிப்படையில் அளவைகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு அளவைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகங்கள் 09, சகல மாவட்டங்களும் உள்ளடங்கும் விதமாக மாவட்ட நில அளவை அலுவலகங்கள் 25, பிராந்திய நில அளவை அலுவலகங்கள் 87, புவிப்பாத்து அளவைகள் மற்றும் விசேட நில அளவைகளுக்காக உள்ள அலுவலகங்கள் 05 என்பன திணைக்களத்தின் மூலம் நடாத்திச் செல்லப்படுகின்றன.

*வெளிக்களப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அளத்தல்கள் தொடர்பிலான விபரங்களை **இணைப்பு ii** இல் பார்க்கவும்.*

1.5.3 அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம் - தியத்தலாவ

பழைய மற்றும் நவீன காணி அளத்தல் தொழில்நுட்ப முறைமை பற்றிய செயன்முறைப் பயிற்சிக்கான வசதிகளைக் கொண்ட, அதற்காக அர்ப்பணிப்புடன் நிற்கின்ற அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரே நிறுவனமாக செயற்படுவதுடன், அளவையியல் மற்றும் படமாக்கல் தொடர்பில் உயர் தரத்தில் கல்வி மற்றும் அனுபவத்தையும் வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இந்நிறுவனமானது, 1969 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. 1990.07.04 ஆம் திகதியிலான விசேட வர்த்தமானி அறிக்கையில் அளவையியல் விஞ்ஞானம் தொடர்பிலான பட்டத்தை வழங்கக் கூடிய நிறுவனமாக 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் இந்நிறுவனம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் நோக்கமாக ஆசிய வலயத்தில் புவியியல் தகவல்கள் தொடர்பிலான கல்வியின் கேந்திர நிலையமாக விளங்கிச் செயற்பட்டு வருகின்ற அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனத்தின் மூலம் தற்போது, அளவையியல் விஞ்ஞானம் தொடர்பான 4 வருட பட்டப் படிப்பு மற்றும் உயர் டிப்ளோமாப் பாடநெறி, வரைபடவியல் விஞ்ஞானம், தொலையுணர்வு தொழில்நுட்பம், வான்ஒளிப்படவியல் , நிலப்பட அச்சுக்கலை தொழில்நுட்பம், லித்தோ அச்சிடுதல் தொழில்நுட்பம் தொடர்பிலான இரு வருட உயர் டிப்ளோமா பாடநெறி மற்றும் நில அளவைத் துறைக்கான உதவியாளர்களுக்கான தேசிய தொழில்சார் தகைமையைப் பெற்றுக்கொடுத்தல் (NVQ 2,3 மட்டங்கள்) ஆகிய பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

அதேபோன்று, திணைக்களத்தின் தொழில்நுட்ப அலுவலர் சபையின் திறமைகள் மற்றும் அறிவினை மேம்படுத்துவதற்குத் தேவையான தொழிற்றுறை அபிவிருத்திப் பாடநெறிகளும் ஆண்டுதோறும் தொடர்ச்சியாக இந்நிறுவனத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றன.

இவற்றிற்கு மேலதிகமாக அரசாங்கத்தினதும் பிற அரை அரசு நிறுவனங்களினதும் (Semi Government Organizations) வேண்டுகோளின்படி, தொழில்நுட்பவியல் பணிக்குழுவினருக்கான மற்றும் அளத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்கலைக்கழக கல்வி நிலையங்களின் சிவில் பொறியியல் துறை மாணவர்களுக்கான அளத்தல் முகாம்கள் எனும் பெயரில் உள்ள செயன்முறைப் பயிற்சி வேலைத்திட்டங்களை ஏற்பாடுசெய்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

*செயல்திறன் தொடர்பிலான விபரங்களை **இணைப்பு iii** இல் பார்க்கவும்.*

2.0 முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்குகள்

விஷேட பணிகள்

நில அளவை நடவடிக்கைகள் மற்றும் படமாக்கல் தொடர்பாக தேசிய தேவைப்பாடுகளை நிறைவேற்றும் பொறுப்பானது இலங்கை நில அளவைத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு பூராகவும் பூகோளிய தொற்றுப் பரவலின் பின்னரும் எமது நாட்டிற்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் போக்குவரத்து நெருக்கடி போன்றவற்றின் காரணமாக 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் அலுவலகத்தை முற்று முழுதாக இயக்குவதற்கு வாய்ப்புக் கிடைக்காததுடன் மறுசீரமைக்கப்பட்ட வருடாந்த அளவை இலக்கிற்கு அமைய 138% முன்னேற்றத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியுமானதாக இருந்தது.

இவ் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட நில அளவைகளில் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொடைப் பத்திரங்கள் வழங்குவதற்காக காணித் துண்டங்கள் 35,066 உம், உரித்துப் பதிவு செய்யும் சட்டத்தின் கீன் உரித்துச் சான்றிதழ்கள் வழங்குவதற்காக காணித் துண்டங்கள் 117,321 உம், காணிகளைச் சுவீகரிக்கும் சட்டத்தின் கீழ் பொது மக்களின் தேவைப்பாடுகளுக்காக காணித் துண்டுகள் 9,194 உம், நீதிமன்றத்தின் மூலம் வெளியிடப்படுகின்ற நீதிமன்ற ஆணைக்குழுவின் நில அளவைகள் 525 உம், முன்மொழியப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்கான பொறியியல் அளவைகள் 8,247 ஹெக்டயரும், பல்வேறு தேவைப்பாடுகளுக்காக

கோரிக்கை முன்வைக்கப்பட்ட அளவைகளுக்காக துண்டுகள் 36,515 ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு முடியுமானதாக உள்ளது.

இதற்கு மேலதிகமாக பல்வேறு நிறுவனங்களுக்காக வரைபடங்களை வழங்குதல், எண்மத் தரவுகளை வழங்குதல், வான் ஒளிப்படங்கள் வழங்குதல் என்பன தேவைக்கு ஏற்ப வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சவால்கள்

பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக கிடைக்கப் பெறுகின்ற அளவைக் கோரிக்கைகளுக்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தாக்கங்கள் ஏற்படாதவாறு நிறைவேற்றிக் கொடுப்பதற்காக அவ் அளவைகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதற்கு அவசியமான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல்.

புவிசார் தகவல்கள் மற்றும் காணித் தகவல்களின் முகாமைத்துவத்திற்காக தரவு முறைமையை வினைத்திறனாக பயன்படுத்துதல்.

எதிர்கால நோக்கு

அரசாங்கத்தின் காணி முகாமைத்துவம் மற்றும் அடிக்கடி அரசாங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு உதவுகின்ற விதமாக காணித் தகவல் முறைமை ஒன்றை நிறுவி நடாத்திச் செல்வதும், ஏனைய தரப்பினர்களுடன் தரவுகளை பரிமாற்றம் செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும்,

குறைந்த காலப் பகுதியில் பல்வேறு நில அளவை நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் மக்களிடம் இருந்து கிடைக்கப் பெறுகின்ற கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்தல்,

புவிசார் தகவல்கள் மற்றும் காணி முகாமைத்துவ துறைகளில் தற்காலத்தில் நிலவுகின்ற உயர் கல்விக்கான கேள்வியானது அளவையிலும் படமாக்கலும் நிறுவனத்தின் மூலம் அப்பட்டப் படிப்பை அமுல்படுத்துவதன் மூலம் இயன்றளவு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

3.0 ஆண்டுக்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகை அறிக்கை

ஏசிஏ.எப்

ஏசீஏ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	2021	
300,000,000	வருமானப் பெறுகைகள்		319,289,778	408,123,680.00	
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
300,000,000	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	319,289,778	408,123,680.00	
300,000,000	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		319,289,778	408,123,680.00	
-	வருமானமற்ற பெறுகைகள்		4,068,792,145	3,793,946,560.00	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		3,877,035,000	3,531,000,000.00	ஏசீஏ-3
-	வைப்புகள்		55,445,538	120,316,209.00	ஏசீஏ-4
126,000,000	முற்பணக் கணக்குகள்		136,311,607	142,630,351.00	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
300,000,000	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		4,068,792,145	3,793,946,560.00	
300,000,000	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		4,388,081,922	4,202,070,240.00	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		1,500,000		
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)				
	கழி : செலவினம்				
4,321,710,000	மீண்டுவரும் செலவினம்		4,125,818,821	3,712,922,067.00	
3,769,795,315	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	3,601,301,122	3,279,682,258.00	
532,642,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	507,209,908	414,466,243.00	ஏசீஏ-2(ii)
19,200,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	17,235,106	18,478,599.00	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
72,685	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	72,685	294,967.00	
4,321,710,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (உ)		4,125,818,821	3,712,922,067.00	
273,800,000	மூலதனம் செலவினம்		61,682,020	362,168,567.00	
70,500,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	53,076,064	98,128,038.00	
	முலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	-	259,333,503.00	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
7,500,000	திறன் விருத்தி	14	6,704,456	2,707,026.00	
195,800,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	1,901,500	2,000,000.00	
273,800,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		61,682,020	362,168,567.00	
	வைப்புக் கொடுப்பனவுகள்		124,077,791	48,955,454.00	ஏசீஏ-4
180,000,000	முற்பணக் கொடுப்பனவுகள்		114,176,688	124,859,482.00	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		238,254,479	173,814,936.00	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		4,425,755,320	4,248,905,570.00	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(39,173,398)	(46,835,330.00)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(39,173,398)	(46,835,330)	ஏசீஏ-7
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3

157

3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	10,600,869,259	8,745,925,865
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	325,303,060	347,437,979
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**10,926,172,318**	**9,093,363,844**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		312,981,141	266,483,807
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		10,600,869,259	8,745,925,865
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	12,321,918	80,954,172
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**10,926,172,318**	**9,093,363,844**

பக்க இலக்கம் 154 முதல் 198 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 199 முதல் 238 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி:	பதவி:	பெயர் : P. G. S. PRIYANTHA
திகதி : 23/2/2023	திகதி : 2023/02/21	திகதி : 2023/02/21
	S. Sivanantharajah Surveyor General Surveyor General's Office Colombo 05.	Director (Finance) Survey Department Colombo 05.

W.A. Chulananda Perera
Secretary
Ministry of Tourism and Lands
"Mihikatha Medura"
Land Secretariat
1060/0, Rajamalwatta Avenue, Battaramulla.

158

3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

VrPV- rP

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் இலாபம்	319,289,778	408,123,680
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	-	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	249,347,446	174,247,766
முற்பணங்களை அறவிடல்	3,877,035,000	3,531,000,000
வைப்புக்களின் பெறுகை	140,861,677	147,400,591
மதிப்பு கூட்டப்பட்ட வரி ரசீதுகள்	55,445,538	120,316,209
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	72,639,017	67,094,478
	4,714,618,455	**4,448,182,724**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	4,102,142,250	3,693,535,078
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	17,307,791	18,478,599
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	237,750,567	135,015,031
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	1,500,000	-
முற்பணக் கொடுப்பனவு	113,737,938	126,095,380
வைப்புக் கொடுப்பனவு	124,077,791	48,955,454
மதிப்பு கூட்டப்பட்ட வரி கட்டணம்	**63,481,236**	**72,745,622**
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**4,659,997,573**	**4,094,825,164**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**54,620,883**	353,357,560
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	5,993,059	7,160
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**5,993,059**	**7,160**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	60,613,941	353,364,720
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**60,613,941**	**353,364,720**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(54,620,883)**	**(353,357,560)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

159

3.4 நிதிக் கூற்றுக் குறிப்புகள்

பின்வரும் குறிப்புகள் 2022 நிதிக் கூற்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

குறிப்பு (i) – இழப்புகள் மற்றும் கைவிடுகை தொடர்பான கூற்று (நி.பி. 106 மற்றும் 113 இன் கீழான இழப்புகள்)
குறிப்பு (ii) – புத்தகங்களில் இருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்று (ஆண்டில் இடம்பெற்ற நி.பி. 109 இன் கீழான இழப்புகள் மற்றும் கைவிடுகைகள் தொடர்பான கூற்று மற்றும் ஆண்டில் நி.பி. 109 இன் கீழான புத்தகங்களில் இருந்தான பதிவழித்தல்கள் மற்றும் அறவீடுகள் தொடர்பான கூற்று)

குறிப்பு (iii) – கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று

குறிப்பு (iv) – பொறுப்புக்கள் தொடர்பான கூற்று (i) நி.பி. 94 (R) மற்றும் (B) பிரகாரம் எட்டப்பட்ட கடப்பாடுகளின் கூற்று

குறிப்பு (V) – கடப்பாடுகள் தொடர்பான கூற்று (ii) நி.பி. 215 (3) (ஆ) மற்றும் (இ) பிரகாரம் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட மாணியங்கள்

குறிப்பு (viii) – 2015/10/23 ஆம் திகதி வெளியிடப்பட்ட திறைசேரி தொழிற்பாட்டு சுற்றறிக்கை இலக்கம் 2015/03 இல் குறிப்பிட்டுள்ள ஆலோசனைகளுக்கு இணங்க ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கணக்குகள் தொடர்பான 2022/12/31 ஆம் திகதிக்கு இருப்பு நிலை அறிக்கை

3.5 வருமான சேகரிப்புச் செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு விகிதாசாரத்தில்
2003.02.04	நில அளவை நாயகத்தின் வருமானம்	450,000,000	300,000,000	319,289,718	106 %

3.6 ஒதுக்கப்பட்ட மானியங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான செயலாற்றுகை

ஒதுக்கீட்டு வகை					ஒதுக்கீடு		உண்மையான செலவீனம்	இறுதி ஒதுக்கீட்டின் சதவீதமாக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
					அசல்	இறுதி		
நிகழ்ச்சித் திட்டம் 1, செயற்திட்டம் 1								
மீண்டும் மீண்டும் செலவினங்கள்								
தனிப்பட்ட சம்பளம்								
288	1	1	1001	சம்பளம் மற்றும் ஊதியம்	135,000,000	135,000,000	127,230,169.49	94
288	1	1	1002	மேலதிக நேரத்திற்கான மற்றும் விடுமுறைக்கான சம்பளம்	1,500,000	1,500,000	1,182,760	79
288	1	1	1003	பிற கொடுப்பனவுகள்	50,315,315	50,315,315	48,790,018.14	97
பயணச் செலவுகள்								
288	1	1	1101	உள்நாட்டு	1,000,000	1,000,000	685,491	69
விநியோகித்தல்								
288	1	1	1201	காகிதாகிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள்	6,000,000	6,000,000	4,831,560	81

288	1	1	1202	எரிபொருள்	12,900,000	12,900,000	12,900,000	100
288	1	1	1203	உணவு மற்றும் சீருடைகள்	100,000	100,000	100,000	100
288	1	1	1205	மற்றவை	500,000	500,000	474,918	95
பராமரிப்பு செலவுகள்								
288	1	1	1301	வாகனங்கள்	3,000,000	3,000,000	1,880,575	63
288	1	1	1302	பொறி மற்றும் இயந்திர உபகரணம்	500,000	500,000	484,040	97
288	1	1	1303	கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	-	-	-	-
சேவைகள்								
288	1	1	1401	போக்குவரத்து	9,512,000	9,512,000	9,508,774	100
288	1	1	1402	அஞ்சல் மற்றும் தொடர்பாடல்	6,000,000	6,000,000	5,498,782	92
288	1	1	1403	மின்சாரம் மற்றும் நீர்	12,000,000	12,000,000	11,563,246	96
288	1	1	1404	வாடகையும்,உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும்	5,500,000	5,500,000	5,232,700	95
288	1	1	1408	செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான குத்தகைத் தவணை	-	-	-	-
288	1	1	1409	மற்றவை	13,500,000	13,500,000	12,710,018	94
இடமாற்றங்கள்								
288	1	1	1506	அரசு ஊழியர்களுக்கான சொத்து கடன் வட்டி	19,000,000	19,000,000	17,051,158	90
பிற மீண்டுவரும் செலவுகள்								
288	1	1	1701	இழப்புக்கள் மற்றும் கைவிடல்கள்	72,685	72,685	72,685	100
மூலதனம் செலவினங்கள்								
மூலதன சொத்து மறுவாழ்வு மற்றும் மேம்பாடுகள்								
288	1	1	2001	கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	5,000,000	5,000,000	2,912,081	58
288	1	1	2002	பொறி மற்றும் இயந்திர உபகரணம்	5,000,000	5,000,000	4,964,522	99
288	1	1	2003	வாகனங்கள்	5,000,000	5,000,000	2,662,901	53
திறன் மேம்பாடு								
288	1	1	2401	பயிற்சியும்,இயலளவு கட்டியெழுப்புதலும்	4,000,000	4,000,000	3,571,707	89
நிகழ்ச்சித் திட்டம் 2, செயற்திட்டம் 2								
மீண்டும் மீண்டும் செலவினங்கள்								
தனிப்பட்ட சம்பளம்								
288	2	2	1001	சம்பளம் மற்றும் ஊதியம்	2,300,000,000	2,300,000,000	2,184,541,451	95
288	2	2	1002	மேலதிக நேரத்திற்கான மற்றும் விடுமுறைக்கான சம்பளம்	8,000,000	8,000,000	7,379,747	92
288	2	2	1003	பிற கொடுப்பனவுகள்	1,179,500,000	1,179,500,000	1,142,983,183	97
பயணச் செலவுகள்								
288	2	2	1101	உள்நாட்டு	110,000,000	110,000,000	106,476,292	97

விநியோகித்தல்								
288	2	2	1201	எழுது கருவிகள் மற்றும் அலுவலக உள்ளூர் தேவைகள்	21,000,000	21,000,000	19,382,010	92
288	2	2	1202	எரிபொருள்	78,500,000	78,500,000	78,499,999	100
288	2	2	1203	உணவு மற்றும் சீருடைகள்	1,250,000	1,250,000	1,116,000	89
288	2	2	1205	மற்றவை	22,000,000	22,000,000	20,161,274	92
பராமரிப்பு செலவுகள்								
288	2	2	1301	வாகனங்கள்	30,000,000	30,000,000	26,784,161	89
288	2	2	1302	பொறி மற்றும் இயந்திர உபகரணம்	3,000,000	3,000,000	2,828,154	94
288	2	2	1303	கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	1,500,000	1,500,000	1,448,856	97
சேவைகள்								
288	2	2	1401	போக்குவரத்து	34,950,000	34,950,000	34,661,554	99
288	2	2	1402	அஞ்சல் மற்றும் தொடர்பாடல்	33,000,000	33,000,000	30,859,742	94
288	2	2	1403	மின்சாரம் மற்றும் நீர்	10,500,000	10,500,000	9,366,011	89
288	2	2	1404	வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும்	81,000,000	81,000,000	77,512,988	96
288	2	2	1408	செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான குத்தகைத் தவணை	9,100,000	9,100,000	8,577,049	94
288	2	2	1409	மற்றவை	8,000,000	8,000,000	7,879,892	98
இடமாற்றங்கள்								
288	2	2	1505	சந்தா மற்றும் பங்களிப்புத் தொகை	200,000	200,000	183,948	92
மூலதனம் செலவினங்கள்								
மூலதன சொத்து மறுவாழ்வு மற்றும் மேம்பாடுகள்								
288	2	2	2001	கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	20,000,000	20,000,000	16,611,204	83
288	2	2	2002	பொறி மற்றும் இயந்திர உபகரணம்	10,000,000	10,000,000	9,623,790	96
288	2	2	2003	வாகனங்கள்	13,000,000	13,000,000	12,010,570	92
திறன் மேம்பாடு								
288	2	2	2401	பயிற்சியும், இயலளவு கட்டியெழுப்புதலும்	2,000,000	2,000,000	1,902,606	95
ஏனைய மூலதன செலவினங்கள்								
288	2	2-0	2509	இதர	1,000,000	195,800,000	1,000,000	
288	2	2-0	2509	இதர	174,800,000	-	-	
288	2	2-1	2509	இதர	20,000,000	-	901,500	
				நிகழ்ச்சித் திட்டம் 2, செயற்திட்டம் 3				
				மீண்டுவரும் செலவினங்கள்				
தனிப்பட்ட சம்பளம்								
288	2	3	1001	சம்பளம் மற்றும் ஊதியம்	64,000,000	64,000,000	60,520,560	95
288	2	3	1002	மேலதிக நேரத்திற்கான மற்றும் விடுமுறைக்கான சம்பளம்	1,000,000	1,000,000	923,891	92

288	2	3	1003	பிற கொடுப்பனவுகள்	30,480,000	30,480,000	27,749,342	91
பயணச் செலவுகள்								
288	2	3	1101	உள்நாட்டு	500,000	500,000	421,940	84
விநியோகித்தல்								
288	2	3	1201	அலுவலக உபகரணங்கள் மற்றும் அலுவலக தேவைகள்	800,000	800,000	604,245	76
288	2	3	1202	எரிபொருள்	4,180,000	4,180,000	4,125,391	99
288	2	3	1203	உணவு மற்றும் சீருடைகள்	50,000	50,000	40,000	80
பராமரிப்பு செலவுகள்								
288	2	3	1301	வாகனங்கள்	1,000,000	1,000,000	949,066	95
288	2	3	1302	பொறி மற்றும் இயந்திர உபகரணம்	100,000	100,000	98,895	99
288	2	3	1303	கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	100,000	100,000	98,542	99
சேவைகள்								
288	2	3	1401	போக்குவரத்து	2,550,000	2,550,000	2,399,387	94
288	2	3	1402	அஞ்சல் மற்றும் தொடர்பாடல்	2,000,000	2,000,000	1,072,926	54
288	2	3	1403	மின்சாரம் மற்றும் நீர்	1,500,000	1,500,000	1,292,895	86
288	2	3	1409	மற்றவை	5,500,000	5,500,000	4,682,541	85
மூலதனம் செலவினங்கள்								
மூலதன சொத்து மறுவாழ்வு மற்றும் மேம்பாடுகள்								
288	2	3	2001	கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	10,000,000	10,000,000	2,780,581	28
288	2	3	2002	பொறி மற்றும் இயந்திர உபகரணம்	1,000,000	1,000,000	993,002	99
288	2	3	2003	வாகனங்கள்	1,500,000	1,500,000	517,414	34
திறன் மேம்பாடு								
288	2	3	2401	பயிற்சியும், இயலளவு கட்டியெழுப்புதலும்	1,500,000	1,500,000	1,230,143	82
மொத்தம்						**4,595,510,000**	**4,187,500,847**	

3.7 நிதிப் பிரமாணம் 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதியாக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட மானியங்கள்

தொடர் இலக்கம்	ஒதுக்கீட்டினை வழங்கிய அமைச்சு / திணைக்களம்	ஒதுக்கீட்டை ஒதுக்கிதற்கான நோக்கம்	ஒதுக்கீடு	உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் சதவீதமாக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
1.	காணி முகாமைத்துவ நடவடிக்கைகள், அரசாங்க பொறுப்பு முயற்சிகள், காணிகள் மற்றும் சொத்து அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு	பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக	198,900,000.00	181,237,721.63	91.12%

3.8 நிதி சார்பற்ற சொத்துக்களை அறிக்கையிடும் செயலாற்றுகை

ஆதனக் குறியீடு	குறியீட்டு விபரம்	2022.12.31 திகதிக்கான சுற்றாய்வுச் சபை அறிக்கைப் படி மீதி	2022.12.31 திகதிக்கான நிதி நிலைமை அறிக்கைப் படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்ற வீதம்
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	1,685,001,242.73	1,685,001,242.73	-	-
9152	இயந்திரங்கள் உபகரணங்கள்	1,483,798,515.90	1,483,798,515.90	-	-
9153	காணி	7,432,069,500.00	7,432,069,500.00	-	-
9154	அருவமான சொத்துக்கள்	-	-	-	-
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	-
9160	நடைபெறும் பணிகள்	-	-	-	-
9180	வரி வழங்கப்பட்ட சொத்துக்கள்	-	-	-	-

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

தயவுசெய்து சிங்களப் பதிப்பின் இணைப்பு iv இனைப் பார்க்கவும்.

4.0 செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டுச் சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சத வீதமாக உண்மையான வெளியீடு				
	>100%	100% - 90%	89%-75%	74% - 50%	50%>
கொடைப் பத்திரங்கள் வழங்குவதற்காக முன்னெடுக்கப்படுகின்ற நியதிச்சட்ட நில அளவீடுகள்.			√		
அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக காணிகளை சுவீகரிப்பதற்கான அளவீடுகள்		√			
பொறியியல் அளவீடுகள்.	√				
பல்வேறு அளவீடுகள்	√				
நீதிமன்ற ஆணைக்குழுவின் நில அளவைகள்	√				
உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அளவீடுகள்	√				
1:50,000 அளவிலான வரைபடங்களை தயாரித்தல் மற்றும் அச்சிடுதல்		√			
1:50,000 அளவிலான வரைபடங்களை விஞ்ஞான ரீதியில் மேம்படுத்தப்பட்ட இடவிளக்கவியல் வரைபடங்களைத் தயாரித்தல்.			√		
1:10,000 அளவிலான வரைபடங்களை தயாரித்தல்		√			
1:10,000 அளவிலான வரைபடங்களை விஞ்ஞான ரீதியில் மேம்படுத்தப்பட்ட இடவிளக்கவியல் வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் பயனரின் கோரிக்கைக்கு அமைய அச்சிடுதல்.	√				
பல்வேறு நிர்வாக அலகுகளுக்காக வபைடங்களைத் தயாரித்தல்.	√				
குறிக்கோள் வரைபடங்களைத் தயாரித்தல்	√				
வாடிக்கையாளர்களின் கோரிக்கைக்கு அமைய தயாரிக்கப்பட்ட வரைபடங்கள்	√				
எண்ம புவியியல்சார் தரவுகளை வெளியிடுதல்.					√

வன் பிரதி வரைபடங்கள் மற்றும் வரைபடங்களை Flex ஊடகத்தில் வெளியிடுதல்.	√				
நிலப்படங்களின் பிரதிகளை வழங்குதல்	√				
திணைக்களத்தினுள் பரீட்சைகளை நடாத்துதல்		√			
காணித் தகவல் முறைமையை இற்றைப்படுத்துதல்.	√				
காணித் தகவல் முறைமையின் தரவுகளை தொடர் சேவையின் மூலம் வழங்குதல்.	√				
1:50,000 அளவிலான இடவிளக்கவியல் தரவு முறைமையை இற்றைப்படுத்துதல்.	√				
1:50,000 அளவிலான தொடர்ச்சியான இடவிளக்கவியல் தரவு முறைமையைத் தயாரித்தல்.		√			
1:10,000 அளவிலான இடவிளக்கவியல் தரவு முறைமையை இற்றைப்படுத்துதல்.	√				
1:10,000 அளவிலான தொடர்ச்சியான இடவிளக்கவியல் தரவு முறைமையை இற்றைப்படுத்துதல்.			√		
நகர வரைபடங்களுக்காக தரவுகளைச் செய்முறைப்படுத்துதல்.			√		
புவிசார் தரவுக் களஞ்சியத்தின் தரவுகளை தொடரறா சேவையின் மூலம் வழங்குதல்.		√			
வான்வழிப் புகைப்படங்களை நுணுகி நோக்கல் மற்றும் வெளியிடுதல்.	√				
தற்பொழுதுள்ள புவியியல் பெயரீடுகளை மக்களின் கருத்துக்களுக்கு அமைய மீண்டும் தரநிர்ணயம் செய்தல்			√		
சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் புவியியல் பெயரீட்டுத் தரவுக் களஞ்சியம் ஒன்றை நடாத்திச் செல்லுதல்.	√				
உத்தியோகபூர்வ மொழியைத் தவிர உரோம மயப்படுத்தப்பட்ட பிரதிகளின் புவியியல் பெயரீடுகளை நடாத்திச் செல்லுதல்.	√				
தேசிய மேற்கட்டமைப்பு முறைமையை கட்டியெழுப்புதல் மற்றும் அதற்கு அவசியமான தரவுகளை வழங்குதல்.	√				
திணைக்கள வலைத்தளத்தை நிலைப்படுத்துதல்.			√		
பொது மக்களின் கோரிக்கைகளை கருத்திற் கொண்டு நிலைப்படுத்துதல்.				√	
B வகுதியின்/ C வகுதியின் கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுதல்.	√				
CORSNet வலையமைப்பை நடாத்திச் செல்லுதல் மற்றும் விரிவாக்குதல்.		√			√
பிற நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைய வகுதியின் கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுதல்.		√			
தற்பொழுது நிலவுகின்ற செங்குத்துக் கட்டுப்பாட்டுப் புள்ளிகளின் கள விசாரணை/ பாதுகாத்தல் / மீள நிறுவுதல்.					√
ஆரம்ப நிலை வகுதியின் மட்டக் கோடுகளை நிறுவுதல்.				√	
இரண்டாம் நிலை நிலை வகுதியின் மட்டக் கோடுகளை நிறுவுதல்.				√	
மூன்றாம் நிலை வகுதியின் மட்டக் கோடுகளை நிறுவுதல்.				√	
பிற நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைய இரண்டாம் நிலை வகுதியின்/ மூன்றாம் நிலை வகுதியின் மட்டக் கோடுகளை நிறுவுதல்.		√			
வேறு விசேட அளவீடுகள்	√				
அளவையியலும் படமாக்கலும் நிறுவனத்தின் சட்டத்தை மறுசீரமைத்தல்.				√	

நான்கு வருட நில அளவையியல் விஞ்ஞானமானி பட்டப் பாடநெறியை நடாத்திச் செல்லுதல்.	√				
தொடர்ச்சியான தொழில்சார் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல்.			√		
சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர்களுக்காக தொடர்ச்சியான தொழில்சார் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.					√
நில அளவை அத்தியட்சகர்களுக்காக தொடர்ச்சியான தொழில்சார் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.				√	
நில அளவையாளர்களுக்காக தொடர்ச்சியான தொழில்சார் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.					√
தொழில்நுட்ப மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்காக தொடர்ச்சியான தொழில்சார் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.					√
இலங்கை தொழில்நுட்ப சேவையின் உத்தியோகத்தர்களுக்காக டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.					√
ஒரு நாள் பாடநெறி திட்டங்களை நடாத்துதல				√	
குறுகிய கால பாடநெறிகளை நடாத்துதல்.				√	

5.0 நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

அபிவிருத்தி, முதலீடு மற்றும் விவசாய நோக்கங்களுக்காக தரவுகளை ஏற்பாடு செய்தல், விண்வெளி சார் தரவுப் பகுப்பாய்விற்காக வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் பதவியணியை சிறப்பான முறையில் பயன்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்குதல் போன்றவை நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளாக இனங்காணப்பட்டு உள்ளன.

5.1 இனங் காணப்பட்ட நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள்

இலக்கு / குறிக்கோள்	அடைவுகள்	குறிகாட்டிகள்	இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம்			
			0% - 49%	50% - 74%	75% -100%	>100%
அபிவிருத்தி, முதலீடு மற்றும் விவசாய நோக்கங்களுக்காக அளத்தல் தரவுகளை தயாரித்தல்	அபிவிருத்தி நோக்கங்களுக்காக காணி அளத்தல் மற்றும் தரவுக் களஞ்சியதைத் தயாரித்தல்.	அளக்கப்பட்ட பிரதேசம் மற்றும் காணித் துண்டுகளின் எண்ணிக்கை				√
விண்வெளி சார் தரவுப் பகுப்பாய்வுக்காக வரைபடங்களைத் தயாரித்தல்.	அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வரைபடங்களைத் தயாரித்தல்	வரைபடம், தரவு முறைமைகளின் எண்ணிக்கை		√		
பதவியணியை சிறப்பான முறையில் பயன்படுத்துவதற்காக அளத்தற் பயிற்சி	தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.	பரீட்சை / பயிற்சிப் பாடநெறிகளின் எண்ணிக்கை		√		

5.2 நிலைபெறுதகு அபிவிருத்தி உபாயங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அடிப்படைக் குறிக்கோள்கள் மூன்றின் கீழ் அதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. அதற்கமைவாக நிலஅளவை தரவுகளைத் தயாரிப்பதில் 138% வீதத்தினை எட்டியுள்ளதுடன் வரைபடம் தயாரித்தலில் 62% செயலாற்றுகையும் மற்றும் பயிற்சி வழங்குதலில் 67% செயலாற்றுகையும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு எதிர்காலத்தில் திணைக்களத்திற்கு காணப்படுகின்ற பிரதான சவாலாக விளங்குவது பௌதிக வளப்பற்றாக்குறை மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் என்பன ஆகும்.

6.0 மனித வள விபரக்குறிப்பு

திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கான மனித வளங்களின் பயன்பாடு. திணைக்களத்தின் மனித வளங்கள் தொடர்பான அமைப்பானது, நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு மனித வள பற்றாக்குறைகளை ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் மற்றும் மனித வளங்களை அபிவிருத்தி செய்வதற்குரிய பிற நிறுவனங்கள் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற பயிற்சிப் பாடநெறிகள், பட்டப் பின் படிப்புப் பாடநெறிகள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகள் மூலம் செயலாற்றுகையை மேம்படுத்துதல்.

6.1 பதவியணி முகாமைத்துவம்

சேவைகளின் வகை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை	வருட இறுதியிலுள்ள பதவியணியின் எண்ணிக்கை	பதவி வெற்றிடம்	அதிகப்படியான ஊழியர்களின் எண்ணிக்கை
சிரேஷ்ட	1144	951	193	0
மூன்றாம் நிலை	83	27	56	0
இரண்டாம் நிலை	1172	995	177	0
ஆரம்ப நிலை	4890	3553	1537	0
தற்காலிக (பல்நோக்கு)	0	170	0	170
மொத்தம்	**7289**	**5696**	**1963**	**170**

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையில் தாக்கம் செலுத்துகின்ற மனிதவளப் பற்றாக்குறை மற்றும்

மேலதிகம்.

இந்த திணைக்களத்தின் தொழில்நுட்ப நடவடிக்கைகள், பொதுவான அலுவலக நடவடிக்கைகள் மற்றும் அந்த செயற்பாடுகளுடன் இணைந்த நிருவாக நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்ற பல்வேறு மட்டத்திலான உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாகும். அவற்றில் இலங்கை நில அளவையாளர்கள் சேவை, இலங்கை நிருவாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவை, நில அளவை கள உதவியாளர் சேவை, திணைக்களமயப்படுத்தப்பட்ட சேவையிலுள்ள மற்றும் இணைந்த சேவைகளுக்குரிய சேவைகளில் கவனத்தில் கொள்ளப்படவேண்டியளவில் வெற்றிடங்கள் திணைக்களத்தினுள் காணப்படுகின்றன. இவ்வாறு திணைக்களத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பதவிகளில் காணப்படும் வெற்றிடம் காரணமாக திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டுள்ளது.

திணைக்களத்திற்கு இணைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையில் வெற்றிடங்கள் நிலவினும் உரிய பணிகளை சரியான முறையில் முகாமைத்துவம் செய்வதன் மூலம் கடமைப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை பூரணப்படுத்துவதன் மூலம் கடமைப் பணிகளை கூடியளவு வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு முடியுமானதாக உள்ளது.

6.3 மனித வள அபிவிருத்தி

6.3.1 பிற நிறுவனங்களின் மூலம் முன்னெடுக்கப்படும் பயிற்சி பாடநெறிகள்

பாடநெறி	அலுவலர்களின் எண்ணிக்கை	கால எல்லை	மொத்த முதலீடு (ரூபா.)		பாடநெறியின் இயல்பு (வெளிநாட்டு / உள்நாட்டு)	பெற்றுக்கொண்ட அறிவு
			உள்நாட்டு	வெளிநாட்டு		
1. தாபன விதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணங்கள் (திறன் மேம்பாட்டு நிதியம்)	04	02 நாட்கள்	28,000.00	–	உள்நாட்டு	இதில் கலந்து கொண்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தாபன விதிக் கோவையில் உள்ளடங்குகின்ற விடயங்கள் மற்றும் நிதிப் பிரமாணம் தொடர்பான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
2. விடுமுறை எழுதுநர்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள் (திறன் மேம்பாட்டு நிதியம்)	01	02 நாட்கள்	8,500.00	–	உள்நாட்டு	இதில் கலந்து கொண்ட உத்தியோகத்தரால் விடுமுறை எழுதுநரால் முன்னெடுக்கப்பட வேண்டிய வகிபாகங்கள் தொடர்பான அடிப்படை அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
3. அரச கொள்முதல் தொடர்பான செயன் முறை சான்றிதழ் பத்திர பாடநெறி (திறன் மேம்பாட்டு நிதியம்)	01	01 நாள்	45,000.00	–	உள்நாட்டு	செயலமர்வில் கலந்து கொண்ட உத்தியோகத்தரால் கொள்முதல் செயன்முறைகள் தொடர்பான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
4. களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் பொருள் விபரப் பட்டியல் நிர்வாகம் தொடர்பான செயலமர்வு (திறன் மேம்பாட்டு நிதியம்)	01	02 நாட்கள்	7,000.00	–	உள்நாட்டு	கலந்து கொண்ட சகல உத்தியோகத்தர்களும் களஞ்சிய முகாமைத்துவத்தை முன்னெடுக்கின்ற விதம் மற்றும் பொருட் பட்டியல் நிர்வாகம் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொண்டனர்.
5. போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பான நிகழ்நிலை செயலமர்வு (திறன் மேம்பாட்டு நிதியம்)	01	02 நாட்கள்	7,000.00	–	உள்நாட்டு	இதில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள்போக்குவரத்து நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக அடிப்படை அறிவைப் பெற்றுக் கொண்டனர்
6. அரச வாகனங்களை பராமரித்தல் (தேசிய தொழில் நிறுவனம்)	02	01 நாள்	5,000.00	–	உள்நாட்டு	இதில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் அரச வாகனங்களை தாபரிப்பது தொடர்பான அறிவைப் பெற்றுக் கொண்டனர்
7. சாரதி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு	20	02 நாட்கள்	3,720.00	–	உள்நாட்டு	செயலமர்வில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் வீதி ஒழுங்குகள் தொடர்பாக அறிந்து கொண்டதுடன் வாகனம் ஒன்றை எவ்வாறு செலுத்த வேண்டும் என கற்றுக் கொண்டனர்
8. கோப்புக்களை ஆவணப்படுத்தல் தொடர்பான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	135	01 நாள்	33,405.00	–	உள்நாட்டு	இதில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் கோப்பு ஒன்றை ஆவணப்படுத்துவது தொடர்பான அடிப்படை அறிவைப் பெற்றுக் கொண்டனர்

9. சாரதிகளின் திறமைகள் மற்றும் மோடார் தொழில்நுட்ப அறிவு தொடர்பான செயலமர்வு ((திறன் மேம்பாட்டு நிதியம்)	01	01 நாள்	3,720.00	_	உள்நாட்டு	இதில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் சாரதி பயிற்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொண்டனர்
10. வளி சீராக்கி மற்றும் குளிர்சாதன தொழில்நுட்பம் 3 - குறுகிய கால பாடநெறி (இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்	01	120 மணித்தியாலங்கள்	32,000.00	_	உள்நாட்டு	இதில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் வளி சீராக்கி மற்றும் குளிர்சாதன பெட்டிகளை பழுது பார்க்கும் விடயங்கள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொண்டனர்
11. சபை உத்தியோகத்தர்களுக்கு கோப்புக்களை ஆவணப்படுத்துவது தொடர்பான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு)	93	01 நாள்	24,390.00	_	உள்நாட்டு	இதில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் ஆவணத்தைப் பேணும் விதம் தொடர்பாக கற்றுக் கொண்டனர்
12. அரச உத்தியோகத்தர்களின் முற்பண "பி" கணக்கைத் தயாரித்தல் (திறன் மேம்பாட்டு நிதியம்)	02	01 நாள்	7,500.00	_	உள்நாட்டு	இதில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் "பி" கணக்கைத் தயாரிக்கும விதம் தொடர்பாக கற்றுக் கொண்டனர்
13. பொதுக் கொள்முதலின் போது விலை மனுக்களை மதிப்பிடுதல் (தொலைக் கல்வி நிறுவனம்)	03	02 நாட்கள்	18,000.00	_	உள்நாட்டு	இதில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் மூலம் கொள்முதல் தொடர்பான அடிப்படை அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
14. மூன்று நாள் சேவை ஆரம்பிப்பு செயலமர்வு (திறன் மேம்பாட்டு நிதியம்)	01	03 நாட்கள்	10,500.00	_	உள்நாட்டு	சேவையில் நிறைவேற்ற வேண்டிய விடயங்கள் தொடர்பான அடிப்படை மற்றும் பூரண விடயங்கள் தொடர்பான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது
15. கணக்காய்வு உசாவல்களுக்கு பதில் வழங்குதல் தொடர்பான பாடநெறி (தேசிய தொழில் நிறுவகம்)	01	01 நாள்	10,000.00	_	உள்நாட்டு	கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய விதம் தொடர்பான அடிப்படை விடயங்கள் தொடர்பான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது
16. 200 மணித்தியால இரண்டாம் மொழி (தமிழ்) பாடநெறி (தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்)	02	200 மணித்தியாலங்கள்	30,000.00	_	உள்நாட்டு	தமிழ் மொழி தொடர்பான அடிப்படை விடயங்கள் கற்றுக் கொள்ளப்பட்டன.
17. செயற்திட்ட முகாமைத்துவம் (திறன் மேம்பாட்டு நிதியம்)	03	02 நாட்கள்	22,500.00	_	உள்நாட்டு	செயற்திட்டம் ஒன்றை உரிய முறையில் ஆரம்பிப்பது தொடக்கம் நிறைவு செய்வது வரையிலான அடிப்படை விடயங்கள் கற்றுக் கொள்ளப்பட்டன.

18. 200 மணித்தியால இரண்டாம் மொழி (தமிழ்) பாடநெறி (தேசிய மொழிக் கல்வ மற்றும் பயிற்சி நிறுவனம்)	01	200 மணித்தியாலங்கள்	7,500.00	_	உள்நாட்டு	தமிழ் மொழி தொடர்பான அடிப்படை விடயங்கள் கற்றுக் கொள்ளப்பட்டன.
19. இரண்டாம் அரச கரும மொழிப் பாடநெறி (அரச கரும மொழிகள் திணைக்களம்)	115	150 மணித்தியாலங்கள்	36,000.00	_	உள்நாட்டு	இரண்டாம் மொழி தொடர்பான அடிப்படை விடயங்கள் கற்றுக் கொள்ளப்பட்டன.
20. கொள்முதல் மற்றும் கணக்கியல் (முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு)	42	01 நாள்	8,760.00	_	உள்நாட்டு	கொள்முதல் மற்றும் கணக்கியல் தொடர்பான அடிப்படை விடயங்கள் இவ் உத்தியோகத்தர்களால் கற்றுக் கொள்ளப்பட்டன.
21. வரைபட உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மற்றும் அதற்கான தரவுகளைச் சேகரிக்கின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு	100	01 நாள்	23,300.00	_	உள்நாட்டு	இத்தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் வரைபடமாக்கல் மற்றும் அதற்கான தரவுகளைச் சேகரித்தல் முன்னெடுக்கப்பட வேண்டிய விதம் தொடர்பான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
22. MIG/ FCAW & GAS CUTTING WELDING COURSE (இலங்கை - கொரியா தேசிய தொழில் பயிற்சி நிறுவனம்)	01	120 மணித்தியாலங்கள்	44,100.00	_	உள்நாட்டு	இவ் உத்தியோகத்தரால் Gas Cutting Welding பாடநெறி தொடர்பான அடிப்படை அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

6.3.2 பிற நிறுவனங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட முதுகலைப் படிப்பு பாடநெறிகள்

பிற நிறுவனங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட பட்டப் பின் படிப்பு பாடநெறிகள்

பாடநெறி	அலுவலர்களின் எண்ணிக்கை	கால எல்லை	மொத்த முதலீடு (ரூபா.)	பாடநெறியின் இயல்பு (வெளிநாட்டு /உள்நாட்டு)	பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவு
GIS & Remote Sensing பட்டப் பின் படிப்பு பாடநெறி (ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், சபரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் பேராதெனிய பல்கலைக்கழகம்)	10	02 வருடங்கள்	500,000.00	உள்நாட்டு	புவியியல் தகவல்களை முறைமைப்படுத்துவதற்குரிய சகல விடயங்கள் தொடர்பாகவும் ஆராய்வதற்கு இதன் மூலம் இயலுமானதாக இருக்கும்.
அளவையியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டப் பின் படிப்பு பாடநெறி (சபரகமுவ பல்கலைக்கழகம்)	02	02 வருடங்கள்	280,000.00	உள்நாட்டு	அளவையியல் விஞ்ஞானத்திற்குரிய சகல விடயங்கள் தொடர்பாகவும் ஆராய்வதற்கு இதன் மூலம் இயலுமானதாக இருக்கும்.

6.3.3 வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் பட்டறை

\பாடநெறி	அலுவலர்களின் எண்ணிக்கை	கால எல்லை	மொத்த முதலீடு (ரூபா.) வெளிநாட்டு	பெற்றுக்கொண்ட அறிவு
தொலை உணர்வுகள் மற்றும் புவிசார் தகவல் முறைமை தொடர்பான முதுகலைப் பட்டப்படிப்பு	01	09 மாதங்கள்	-	01. தொலை உணர்வுப் பௌதீகவியல் 02. தள அளவிடைகளின் ஒளவண்ண ஒப்பம் மற்றும் காட்சி உருவ பொருட் கோடல். 03. தொலை உணர்வுத் தரவுக் கோளாருகள், தரவு உற்பத்திகள் மற்றும் அவற்றின் மூலாதாரங்கள். 04. வெப்ப மற்றும் நுண்ணலை தொலை உணர்வுகளின் கோட்பாடுகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளுதல்
விவசாய நிலங்களை ஒருங்கிணைப்பது தொடர்பான சர்வதேச கருத்தரங்கு	01	05 நாட்கள்	-	இலங்கை நீர்ப்பாசன முன்மொழிவுத் திட்டத்தை தயாரிக்கது தொடர்பான கையேடு தயாரித்தல்.
ஐக்கிய நாடுகளின் புவியியல் இடஞ்சார் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச கருத்தரங்கு	01	05 நாட்கள்	-	01. காணி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான நான்காம் ஒன்று கூடல் - விசேட நிபுணர்களின் குழு 02. விளைத்திறனான காணி நிர்வாகம் தொடர்பான கருத்தரங்கு 03. இலங்கையில் விளைத்திறனான காணி நிர்வாக முறைமைக்கான சட்டகத்தை அமுல்படுத்துவதற்கான வீதி வரைபடத்தை முன்வைத்தல்.
JJ - FAST பயன்படுத்தி அயனமண்டல காடுகளின் முகாமைத்துவம் ALOS -2 அடிப்படையாகக் கொண்ட காடுகளின் கண்காணிப்பு முறைமை மற்றும் பிற செய்மதி தொழில்நுட்பங்கள் தொடர்பான சர்வதேச கருத்தரங்கு	01	10 நாட்கள்	-	எமது நாட்டிற்காக நிலைபெறுதகு வன முகாமைத்துவத்திற்காக JJ - FAST, ALOS -2 அடிப்படையாக கொண்ட வன கண்காணிப்பு முறைமையைப் பயன்படுத்துவது எவ்வாறு?
உலகளாவிய வழி செலுத்தல் செயற்கைக்கோள் அமைப்பு பற்றிய 4வது முதுகலை பட்டப்படிப்பு	01	09 மாதங்கள்	-	
தேசிய வரைபடமாக்கல் மற்றும் அளவீடுகளை திட்டமிடுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்	01	03 மாதங்கள்	-	
ஆசியா பசுபிக் வலயங்களுக்காக வெள்ளம் மற்றும் மண்சரிவு என்பவற்றை வெளிப்படுத்தி அனர்த்த ஆபத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்காக இடஞ்சார் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.	02	12 நாட்கள்	-	01. வெள்ளம் மற்றும் மண் சரிவு இடர்களின் போது உதவு வழங்குவதற்காக செய்மதியை அடிப்படையாகக் கொண்ட தொடர்பாடல் மற்றும் அசைவு 02. அதிக மழை வீழ்ச்சியை பகுப்பாய்வு செய்வதற்காக செய்மதி தரவுத் தொகுதியை பயன்படுத்துதல் 03. நகர வெள்ள இடர்களைக் குறைப்பத்தல் மற்றும் ஆர்.எஸ். மற்றும் பீ.ஐ.எஸ். தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி முகாமைத்துவம் செய்தல்.

சிறிய செய்மதி தொழிற்பாடு	01	12 நாட்கள்	-	01. தேசிய அபிவிருத்திக்காக இடஞ்சார் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் 02. செய்மதி தொழிற்பாட்டின் முறைமை பொறியியலாளர் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் 03. இயந்திர மற்றும் வெப்ப நிர்வாக முறைமை 04. சிறிய செய்மதி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அவசியமான வளங்கள்.
ஐக்கிய நாடுகளின் இரண்டாம் உலக புவியியல் தகவல் மாநாடு	01	05 நாட்கள்	-	01. உலக பொருளாதாரத்தின் மற்றும் சமூகத்தில் புவியிடஞ்சார் அறிவை உட்கட்டமைப்பு அமைப்பின் பாத்திரத்தை முன்நோக்கி கொண்டு செல்லுதல். 02. தொலை உணர் பூகோள மேற்பார்வைகளில் புத்தாக்கங்களின் பயன்பாடு 03. புத்தாக்க தளங்களை அடிப்படையாகக் கொண்ட சேவைகள் 04. நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளுக்கான அடிப்படைத் தரவுகளை அபிவிருத்தி செய்தல். 05. தேசிய புவியிடஞ்சார் தகவல்களின் தயாரிப்பை நவீன மயப்படுத்துதல் மற்றும் பெயர்ப்புச் செய்தல். 06.தேசிய புவியியல் தரவுகளை நவீன மயப்படுத்தலும் உருமாற்றம் செய்தலும்
புவிச்சரிதவியல் பிரயோகங்களுக்கான தொலைத் தொடர்பு தரவுப் பகுப்பாய்வு தொழில்நுட்ப முறைகளை மேம்படுத்துதல்.	02	04 நாட்கள்	-	

இந்த பயிற்சி திட்டத்தில்; பங்கேற்ற அனைத்து அதிகாரிகளும் அறிவைப் பெற்று, அந்தந்த கிளைகளின் மற்ற அதிகாரிகளுடன் பயிற்சியில் பெற்ற விடயங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

7.0 இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	உரியதாக்கிக் கொள்ள வேண்டிய தேவைப்பாடுகள்	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கம் அற்றது)	இணக்கமற்றதாயின் அதற்கான சிறு விளக்கம்	இணக்கப்பாடின்மையை எதிர்காலத்தில் தடுப்பதற்காக பிரேரணை முன்வைக்கப்படுகின்ற துல்லியமான தீர்மான செயல்முறைகள்
1	**பின்வரும் நிதிக் கூற்றுக்கள்/ கணக்குகள் என்பன உரிய திகதிகளில் முன்வைக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	இணக்கமானது.		
1.2	அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு	இணக்கமானது.		
1.3	வியாபார மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வர்த்தக முற்பணக் கணக்கு)	பொருத்தமற்றது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	பொருத்தமற்றது		
1.5	விசேட முற்பணக் கணக்கு	இணக்கமானது.		
1.6	பிற	பொருத்தமற்றது		
2	**புத்தகங்கள் மற்றும் ஆவணங்களைப் பேணுதல் (நி.பி. 445)**			
2.1	அரச நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இற்கு அமைய நிலையான சொத்துக்கள் ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல்.	இணக்கமானது.		
2.2	பிரத்தியேக வேதனாதிகள் ஆவணம்/ பிரத்தியேக வேதனாதிகள் அட்டைகளை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல்.	இணக்கமானது.		
2.3	கணக்காய்வு விசாரணை ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல்.	இணக்கமானது.		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கை ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல்.	இணக்கமானது.		

2.5	சகல மாதாந்த கணக்குகளினதும் சாராம்சங்களைத் தயாரித்து உரிய திகதியில் பொதுத் திறைசேரிக்கு முன்வைத்தல்.	இணக்கமானது.		
2.6	காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல்.	இணக்கமானது.		
2.7	பொருள் விபரப் பட்டியல் ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல்.	இணக்கமானது.		
2.8	இருப்பு ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல்.	இணக்கமானது.		
2.9	நட்ட இழப்பு ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல்.	இணக்கமானது.		
2.10	பொறுப்புக்கள் ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல்.	இணக்கமானது.		
2.11	அடியிதழ்சேர் புத்தகங்கள் ஆவணத்தை (GA-N 20) இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல்.	இணக்கமானது.		
3	**நிதிசார் நிர்வாகத்திற்காக பணிகளைக் கையளித்தல் (நி.பி. 135)**			
3.1	நிதிசார் அதிகார நிறுவனத்தினுள் அதிகாரங்களை ஒப்படைக்கப்பட்டு உள்ளமை	இணக்கமானது.		
3.2	நிதிசார் அதிகாரங்களை ஒப்படைப்பது தொடர்பாக நிறுவனத்தினுள் விழிப்புணர்வு ஏற்படுத்தி உள்ளமை.	இணக்கமானது.		
3.3	அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் உத்தியோகத்தர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையானவர்களின் ஊடாக அங்கீகரிக்கப்படும் விதமாக அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டு உள்ளமை	இணக்கமானது.		
3.4	2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய, அரசாங்கத்தின் சம்பளப் பத்திர மென்பொருள் பொதியைப் பயன்படுத்தும் போது கணக்காளர்களின் நிர்வாகத்தின் கீழ் செயற்படுதல்	இணக்கமானது.		
4	**வருடாந்த திட்டங்களைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தைத் தயாரித்தல்.	இணக்கமானது.		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டத்தைத் தயாரித்தல்.	இணக்கமானது.		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்.	இணக்கமானது.		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்து தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	இணக்கமானது.		
4.5	வருடாந்த நிதிப் பாய்ச்சல் கூற்றை உரிய திகதியில் திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது.		
5	**கணக்காய்வு விசாரணைகள்**			
5.1	கணக்காய்வாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில், சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் வாதுரை முன்வைத்து உள்ளமை.	இணக்கம் அற்றது.	மாகாண அலுவலகத்தின் மூலம் உரிய வெளிக்கள அலுவலகங்களின் பதில்கள் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு மேலதிக நேரத்தை செலவிட வேண்டி உள்ளமை	

6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நிதிப் பிரமாணம் 134(2) இற்கு அமைய வருட தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடிய பின்னர், உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்.	இணக்கமானது.		
6.2	சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலத்தினுள் வாதுரை முன்வைத்து உள்ளமை.	இணக்கம் அற்றது	சில சந்தர்ப்பங்களில் நடைமுறை சாத்தியத்தைக் கருத்திற் கொண்டு காலம் தாழ்த்தப்பட்டுள்ளது.	
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவிற்கு அமைய சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
6.4	நிதிப் பிரமாணம் 134(3) இற்கு அமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை. Q23	இணக்கமானது.		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA சுற்றறிக்கை 1-2019 இற்கு அமைய, குறைந்த பட்சம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நான்கேனும் (04) உரிய ஆண்டினுள் நடாத்தப்பட்டு இருத்தல்.	இணக்கமானது.		
8	**சொத்து முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் கையுதிர்த்தல் தொடர்பான தகவல்கள் கணக்குத் தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
8.2	மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, அச்சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துவதற்காக ஒருங்கிணைப்பதற்குப் பொருத்தமான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவ் உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள் கணக்குத் தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
8.3	அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இற்கு அமைய, பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கையானது குறிப்பிட்ட திகதிக்கு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
8.4	வருடாந்த பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் பிற பரிந்துரைகளை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் முன்னெடுத்தல்.	இணக்கமானது.		

8.5	பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட பொருட்களை கையுதிர்ப்பதானது நி.பி. 772 இற்கு அமைய முன்னெடுத்தல்.	இணக்கமானது.		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	கையிறுப்பிலுள்ள வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
9.2	வாகனங்கள் பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்டு 06 மாதங்களுக்கும் குறைந்த காலப் பகுதியில் கையுதிர்க்கப்பட்டு உள்ளமை.	இணக்கம் அற்றது	பல கட்டங்களின் கீழ் செயற்படும் போது (கணிப்பீட்டுக் குழு/ விலை மதிப்பீட்டுக் குழு நியமித்தல், அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல், வாகனங்களின் பதிவை இரத்துச் செய்தல், விலை மனு கோரல் போன்ற விடயங்கள்) அந்நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக செல்லும் போது உரிய குழுவின் தீர்மானத்தைப் பெற்றுக் கொள்ள காலம் செல்கின்றமை.	குழுக்களின் தீர்மானங்களை அவசரமாக வழங்குவதற்கு ஆலோசனை வழங்குவதன் மூலம்
9.3	வாகன பதிகைப் புத்தகங்களைப் பேணி அவற்றை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல்.	இணக்கமானது.		
9.4	சகல வாகன விபத்துக்கள் தொடர்பாகவும் நி.பி. 103, 104 மற்றும் 109 இற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளுதல்.	இணக்கமானது.		
9.5	2016.12.29 திகதி 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் தகனத்தை மீள் பரிசோதித்தல்.	இணக்கம் அற்றது	எரிபொருள் தகன பரிசோதனைக்காக வாகனங்களுக்கு அவசியமான முழுமையான எரிபொருள் கொள்ளளவு (Full Tank) பெற்றுக் கொள்வதற்காக தற்பொழுது ஒரு வாகனத்திற்கு வழங்கப்படுகின்ற பங்கு வீதம் போதாமல் உள்ளமையால் செலுத்தக் கூடிய நிலைமையில் உள்ள வாகளங்கள் சுமார் 300 இன் எரிபொருள் தகனத்தை பரிசோதிக்க முடியாமல் போயுள்ளது.	தற்பொழுது வழங்கப்பட்டுள்ள எரிபொருள் பங்கு வீதமானது எரிபொருள் தகன பரிசோதனைக்கு மாத்திரமாவது அதிகரித்து வழங்குவதற்கு அமைச்சரவைக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டு உள்ளது.
9.6	குத்தகைக் கால எல்லையின் பின்னர், குத்தகை வாகனங்களின் பதிகைப் புத்தகங்களின் முழுமையான உரிமையை கையகப்படுத்தி உள்ளமை.	இணக்கமானது.		

10	**வங்கிக் கணக்குகளின் முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதிக்கு வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து சான்றுப்படுத்தி அவற்றை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
10.2	மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் இருந்து முன்னோக்கிக் கொண்டு வரப்பட்ட தொழிற்படா வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
10.3	வங்கி இணக்கக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சரிகட்டப்பட வேண்டி இருந்த மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்திற்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொண்டு அம்மீதிகள் ஒரு மாத காலத்தினுள் தீர்க்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
11	**மானியங்களின் பயன்பாடுகள்.**			
11.1	கருத்திற் கொள்ளப்பட்டிருந்த மானியங்களானது அவற்றின் வரையறையை மீறாத வகையில் செலவுகளை ஏற்றல்.	இணக்கமானது.		
11.2	நி.பி. 94(1) இற்கு அமைய, வழங்கப்பட்ட மானியத்திலிருந்து பயன்படுத்திய பின்னர் ஆண்டு இறுதியில் எஞ்சிய மானியங்களானது வரையறையை மீறாத வகையில் பொறுப்புக்களுக்கு எட்டுதல்.	இணக்கமானது.		
12	**அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்**			
12.1	வரையறைகளுக்கு இணங்குதல்.	இணக்கமானது.		
12.2	நிலுவையாக காணப்பட்ட கடன் மீதிகள் தொடர்பாக காலப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
12.3	ஒரு வருடத்திற்கும் அதிகமான காலத்தில் இருந்து நிலவி வருகின்ற கடன் மீதிகள் தீர்க்கப்பட்டு உள்ளமை.	இணக்கம் அற்றது	நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன	
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 571 இற்கு அமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளமை.	இணக்கம் அற்றது	நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன	
13.2	பொது வைப்புக்களுக்கான நிர்வாகக் கணக்கை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல்	இணக்கமானது.		
14	**பணிமுற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டு முடிவில் நிதிப் புத்தகத்தின் மீதியை திறைசேறி தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு பணம் அனுப்பப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
14.2	நி.பி. 371 இற்கு அமைய வெளியிடப்பட்ட தேவை நிமித்த உப பணிமுற்பணமாது, அச்செயற்பாடு முடிவடைந்து ஒரு மாத காலத்தினுள் தீர்க்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
14.3	நி.பி. 371 இற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மீறாத வகையில் தேவை நிமித்த உப பணிமுற்பணம் வெளியிடப்பட்டு இருந்தமை.	இணக்கமானது.		
14.4	பணிமுற்பணக் கணக்கு மீதியை, திறைசேரியின் புத்தகங்களுடன் மாதாந்தம் ஒப்பு நோக்குதல்.	இணக்கமானது.		

15	**வருமானக் கணக்கு**			
15.1	உரிய பிரமாணங்களுக்கு இணங்கியதாக, சேகரிக்கப்பட்ட வருமானத்தில் இருந்து மீளச் செலுத்துகைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
15.2	சேகரிக்கப்பட்டு இருந்த வருமானங்கள், வைப்புக் கணக்கிற்கு வரவில் இடாமல் நேரடியாக வருமானத்திற்கு வரவில் இடப்பட்டு இருந்தமை.	இணக்கமானது.		
15.3	நி.பி. 176 இற்கு அமைய நிலுவை வருமான அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வரையறைக்குள் பதவியணியை நடாத்திச் செல்லுதல்.	இணக்கமானது.		
16.2	பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்களை எழுத்து மூலம் வழங்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
16.3	20.09.2017 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இற்கு அமைய சகல அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
17	**பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்.**			
17.1	தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கு அமைய தகவல் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் ஆவணத்தை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல்	இணக்கமானது.		
17.2	நிறுவனம் தொடர்பான தகவல்களை அதன் வலைத்தளத்தின் ஊடாக வழங்கப்பட்டு உள்ளதுடன், வலைத்தளத்தின் ஊடாக அல்லது மாற்று வழிகள் ஊடாக நிறுவனம் தொடர்பான பொது மக்களின் பாராட்டுக்கள் / குற்றச்சாட்டுக்களை வெளியிடுவதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 08 ஆவது மற்றும் 10 ஆவது பிரிவுகளுக்கு அமைய ஆண்டிற்கு இரு தடவைகள் அல்லது ஆண்டிற்கு ஒரு முறை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
18	**பிரஜைகள் பட்டயத்தை அமுல்படுத்துதல்.**			
18.1	05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2018(1) ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய பிரஜைகள்/ சேவைப்பயனர் பட்டயம் ஒன்று உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
18.2	அச் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம், பிரஜைகள்/ சேவைப்பயனர் பட்டயம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அமுல்படுத்தும் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல் மற்றும் மதிப்பீடுகளுக்காக நிறுவனத்தின் மூலம் செயன்முறை ஒன்றை தயாரிக்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		

19	**மனித வள திட்டத்தை உருவாக்குதல்.**			
19.1	2018.01.24 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 பின்னிணைப்பு 02 மாதிரியை அடிப்படையாகக் கொண்டு மனித வள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
19.2	பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்காகவும் ஆண்டு ஒன்றிற்கு குறைந்த பட்சம் 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வாய்ப்பு ஒன்றை மேற்குறிப்பிட்ட மனித வள திட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தி உள்ளமை.	இணக்கம் அற்றது.	பாரியதொரு பதவியணி காணப்படுதல் மற்றும் போதுமான அளவு மானியங்கள் இல்லாமையால் முன்னெடுக்க முடியாமல் போனது	ஆண்டொன்றிற்கு காணப்படுகின்ற மானியங்களின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் ஒரு பிரிவினருக்காவது பயிற்சி வாய்ப்பை வழங்குவதற்கு நடவடிக்கைகள் உருவாக்கப்படல் வேண்டும்.
19.3	மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையில் பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியை அடிப்படையாகக் கொண்டு மொத்த பதவியணிக்காகவும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
19.4	மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையில் 6.5 ஆம் பந்திக்கு அமைய மனித வள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல், ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துதல், ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல் தொடர்பான பொறுப்புக்களை ஒப்படைத்து சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		
20	**கணக்காய்வு பந்திகளுக்கு பதில் வழங்குதல்**			
20.1	கடந்த ஆண்டிற்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பந்திகள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் திருத்தப்பட்டு உள்ளமை.	இணக்கமானது.		

8.0 முடிவுரை

இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டில் சாதாரண மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தி காலம் நாடு முழுவதும் பரவிய அமைதியற்ற சூழ்நிலை மற்றும் ஆண்டு பூராகவும் நிலவிய பொருளாதார நெருக்கடிகள் காரணமாக திணைக்களத்தின் பணிகளை முன்னெடுப்பதில் பாரிய சவாலாக காணப்பட்டதுடன் அரசினதும் மற்றும் மக்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பாக வருடஆரம்பத்தில் திணைக்களத்தினால் திட்டமிடப்பட்டஇலக்குகளை திருத்தம் செய்ய வேண்டி ஏற்பட்டது. எவ்வாறாயினும், அளவீட்டு நடவடிக்கைகளில் இத்திருத்தியமைக்கப்பட்டஇலக்குகளை மீறிச் செல்கின்ற முன்னேற்றத்தை வழங்குவதற்கு களப் பதவியணி ஆற்றிய அர்ப்பணிப்பும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் கடமையாற்றி திணைக்களத்தின் செயற்றிறனை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காக ஒத்துழைப்பு வழங்கிய திணைக்களத்தின் சகல சேவைகளுக்குமான மற்றும் சகல மட்டங்களுக்கும் உரிய பதவியணியின் உறுப்பினர்களின் சேவைகளை வெகுவாக பாராட்டுகின்றேன் என்பதனை இங்கே குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகின்றேன். அதேபோன்று, இச்செயற்பாடுகளை மேற்கொள்வதில் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் சகல தொழிற்சங்கங்களும் வழங்கிய ஒத்துழைப்பினையும் வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

எஸ். சிவானந்தராஜா

நில அளவையாளர் நாயக

நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

1. மனித வளம் மற்றும் நிர்வாகப் பிரிவு

பணிகள்

திணைக்களத்தின் செயற்பாடுகளை சிறப்பான முறையில் நடாத்திச் செல்லுதற்குத் தேவையான ஊழியர்களை நியமித்தல், திணைக்கள ஊழியர்களின் தனிப்பட்ட கோப்புகளைப் பேணல், முதலிய மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய திணைக்களத்தின் மற்றும் நிருவாகச் செயற்பாடுகளை மிகச் சிறந்த முறையில் செய்தல்.

செயலாற்றுகை

மனித வள முகாமைத்துவத்தின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

	செயற்பாடு	செயற்படுத்துவதற்குத் தீர்மானித்திருந்த எண்ணிக்கை	செயற்படுத்திய அளவு
1	சேவைக்கான ஆட்சேர்ப்புக்கள்	495	279
2	நேர்முகப் பரீட்சை நடாத்துதல்	8	8
3	சேவையினை உறுதிப்படுத்தல்	420	375
4	பதவியுயர்வு	278	260
5	சம்பள ஏற்றங்களை செலுத்துதல்	2105	1846
6	ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்தல்	-	-
7	சேவையை விட்டுச் செல்லல்	21	21
8	ஓய்வு பெறுதல்	221	213
9	இராஜினாமாச் செய்தல்	31	26
10	பணி நீக்கம் செய்தல்	14	14
11	மீண்டும் சேவையில் அமர்த்துதல்	4	4
12	வெளிநாட்டு விடுமுறைகளை அனுமதித்தல்	54	46
13	அமைச்சரவைப் பத்திரம்	-	-
14	கடன் அனுமதித்தல்கள் [சொத்துக்கள்]	12	12

1.1 ஒழுக்காற்றுப் பிரிவு

பணிகள்

திணைக்களத்தில் பணியாற்றுகின்ற நில அளவைச் சேவையின் உத்தியோகத்தர்களின், ஒருங்கிணைந்த சேவையின் உத்தியோகத்தர்களின் மற்றும் திணைக்களப் பதவிகளில் பணியாற்றுகின்ற அனைத்து உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் தாபன விதிக் கோவையின் 02 ஆம் பிரிவிற்கு அமைய ஆரம்ப கட்ட விசாரணையை நடாத்துதல், குற்றப் பத்திரம் தொடுத்தல், எச்சரிக்கை விடுத்தல், முறையான ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ளுதல், ஒழுக்காற்று கட்டளைகளை வெளியிடுதல் உட்பட ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குள்ள சகல கடமைகளும் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

செயலாற்றுகை

2022.01.01 ஆம் திகதிக்கு ஒழுக்காற்றுப் பிரிவில் அமுலில் காணப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை	2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை	2022 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை	2022.12.31 ஆம் திகதியாகும் போது ஒழுக்காற்றுப் பிரிவில் அமுலில் உள்ள கோப்புக்களின் எண்ணிக்கை
47	23	21	49

1.2 போக்குவரத்துப் பிரிவு

பணிகள்

பிரதான அலுவலகத்தின் போக்குவரத்துத் தேவைகளுக்காக பணியாற்றுதல், வாகன மீள் திருத்தங்கள்/ தாபரிப்பு/ பரிசீலனை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் போலவே வாகன விபத்துக்களுக்குரிய சகல நடவடிக்கைகள் தொடர்பாகவும் செயற்படுதல்.

செயலாற்றுகை

	விடயம்	2022 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள்	2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அளவு	2022 ஆம் ஆண்டில் நிறைவேற்ற முடியாமல் போன அளவு
1	வருமான உத்தரவுப் பத்திரம் பெற்றுக் கொள்ளுதல்	255	255	-
2	வாகன விபத்துக்கள் தொடர்பான கடிதங்கள் பெறுகை	125	124	1
3	நாளாந்த ஓட்டக் குறிப்புகளின் பெறுகை	5556	5556	-
4	வாகனங்களை பழுது பார்த்தல்	5	5	-
5	வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குதல்	151	151	-
6	கடமைகளுக்குச் செல்வதற்காக வாகனங்கள் வழங்குதல்	365	318	47
7	வாகனங்களை கடமைக்கு இணைத்தல்	16	16	-
8	விடுமுறைத் தகவல்களை அனுப்புதல்	6	6	-
9	உத்தியோகபூர்வ வாகனங்களை கடமைக்கு இணைத்தல்	5	5	-
10	மேலதிக நேர/ போக்குவரத்துச் செலவு உறுதிச் சீட்டுக்களை முன்வைத்தல்	43	43	-
11	வாகனங்களை காப்புறுதி செய்தல்	308	308	-
12	கணக்காய்வு உசாவல்கள்	7	7	-
13	நலன்புரிச் செயற்பாடுகளுக்கு வாகனங்கள் வழங்குதல்	9	9	-
14	உதவி சாரதிகள்	8	8	-
15	இதர ஆவணங்களின் கொடுக்கல் வாங்கல்	22	21	1
16	வாகனங்களை பரிசீலிப்பதற்கான கோரிக்கைகள்	42	41	1
17	சாரதி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்	7	6	1
	கூட்டுத் தொகை	**6930**	**6879**	**51**

திணைக்கள வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பில் கீழ்வருமாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இடம்பெற்ற விபத்துக் கோப்புக்களின் எண்ணிக்கை	2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற விபத்துக்களின் எண்ணிக்கை	2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட மொத்த விபத்துக் கோப்புக்களின் எண்ணிக்கை	2022 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட விபத்துக் கோப்புக்களின் எண்ணிக்கை	2022.12.31 ஆம் திகதிக்கு அமுலில் உள்ள எஞ்சிய விபத்துக் கோப்புக்களின் எண்ணிக்கை
40	11	51	18	33

2.0 சட்டத்துறைப் பிரிவு

பணிகள்

திணைக்களம் தொடர்பான சட்ட விவகாரங்களை மேற்கொள்ளுதல், மாவட்ட நீதிமன்றம் / மேல் நீதிமன்றம் / மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவற்றால் திணைக்களத்தினால் வழக்குகள் தாக்கல் செய்யும்போதும் திணைக்களத்திற்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படும்போதும் சட்டமா அதிபருக்கு உதவுதல் ,திணைக்களத்தின் அதிகாரிகள் பணிகள்புரியும்போது முகங்கொடுக்கின்ற சட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் ,திணைக்களத்திற்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின்போது நிள அளவையாளர் நாயகம் சார்பாக ஆஜராதல்.

செயலாற்றுகை

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பில் பின்வருமாறு பங்காற்றப்பட்டுள்ளது.

நீதிமன்றம்	2022.01.01 ஆம் திகதியன்று நிலவும் எண்ணிக்கை	2022.12.31 வரையான காலத்தில் கிடைக்கப் பெற்ற எண்ணிக்கை	2022.12.31 வரையான காலத்தில் முடிக்கப்பட்ட எண்ணிக்கை	2022.12.31 ஆந் திகதியன்று நிலவும் எண்ணிக்கை
உயர் நீதிமன்றம்	28	04	01	31
மேன்முறையீட்டு நீதிமன்றம்	26	13	06	33
மேல் நீதிமன்றம்	03	02	-	05
மாவட்ட நீதிமன்றம்	37	06	01	42

அடிப்படை விடயங்களை மேற்கொள்கின்ற கோப்புகள் தொடர்பில் கீழ்வருமாறு பங்காற்றப்பட்டுள்ளது .

2022.01.01 ஆம் திகதியன்று நிலவும் எண்ணிக்கை	2022.12.31 வரையான காலத்தில் கிடைக்கப் பெற்ற எண்ணிக்கை	2022.12.31 வரையான காலத்தில் முடிக்கப்பட்ட எண்ணிக்கை (பணம் அறவிட்டு அல்லது பதிவழிப்பதற்கு ஆற்றுப்படுத்தி)	2022.12.31 வரையான காலத்தில் சட்டமா அதிபர் அவர்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை	2022.12.31 ஆம் திகதியன்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் கோப்புக்களின் எண்ணிக்கை
28	06	10	-	24

வழக்குத் தாக்கல் செய்வதற்காக சட்டமா அதிபருக்கு கோப்புக்களை ஆவணப்படுத்தல் கீழ்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது

2022.01.01 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு உள்ள கோப்புக்கள்	2022.12.31 வரையான காலத்தில் ஆற்றுப்படுத்தப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை	2022.12.31 வரையான காலத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய முடிக்கப்பட்ட அல்லது வழக்குத் தொடுக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை	2022.12.31 ஆந்திகதியன்று வழக்குத் தொடரும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் கோப்புக்களின் எண்ணிக்கை
10	-	01	09

மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கோப்புக்களை ஆவணப்படுத்தல் கீழ்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022.01.01 ஆந்திகதியன்று நிலவும் எண்ணிக்கை	2022.12.31 வரையான காலத்தில் கிடைக்கப் பெற்ற எண்ணிக்கை	2022.12.31 வரையான காலத்தில் முடிக்கப்பட்ட எண்ணிக்கை	2022.12.31 ஆந்திகதியன்று நிலவும் எண்ணிக்கை
09	02	-	11

3. கணக்குகள் பிரிவு

பணிகள்

35 கட்டண அலுவலகங்களை உள்ளடக்கிய துறைசார் கணக்கு முறையை பராமரித்தல். திணைக்களத்தின் வருடாந்த தொடர்ச்சியான மற்றும் மூலதன செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் அதை அரசாங்க வரவு செலவுத் திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல். அதற்கேற்ப கிடைக்கின்ற ஒதுக்கீட்டிற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திலிருந்து தேவையான நிதிகளைப் பெற்றுக்கொண்டு, அனைத்து அலுவலகங்களுக்கும் வழங்குதல் மற்றும் நிதிக் கொள்கைகளின்படி அவற்றை திறம்பட பயன்படுத்துதல்.

திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியினை வரம்புகளுக்குள் நிர்வாகித்தல் மற்றும் பராமரித்தல்.

திணைக்களத்தின் வருமானத்தை தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் மூலம் வசூலிக்க நடவடிக்கை எடுப்பது.

கணக்காய்வு தொடர்பிலான வினாக்களுக்கான பதில்களை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு முறையாக சமர்ப்பித்தல் மற்றும் திணைக்களத்தின் வருடாந்த நிதிநிலை அறிக்கைகளை உரிய திகதியில் தயாரித்தல்.

செயலாற்றுகை

தயவுசெய்து, முதன்மை அறிக்கையின் பக்கம் 38-45 (ஆண்டின் மொத்த நிதி செயற்றிறன்), பக்கங்கள் 53-59 (இணக்க அறிக்கை) ஐயைப் பார்க்கவும்.

4. உபகரணங்கள் மற்றும் கட்டடங்கள் பிரிவு

பணிகள்

- நில அளவையாளர் நாயகம் அலுவலகம் ,மாகாண நில அவையாளர் அலுவலகம் ,மாவட்ட நில அளவையாளர் அலுவலகம் ,திணைக்களத்தின் கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்படுகின்ற பிரதேச நில அளவையாளர் அலுவலகங்களில், மற்றும் திணைக்களத்தின் பங்களாக்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுபார்த்தல் மற்றும் கட்டுமானம் தொடர்பில் செயற்படுதல்.
- அளவிடும் கருவிகள் மற்றும் ஆபரணங்களை சரிசெய்தல் மற்றும் சேவை செய்தல்
- அளவிடும் நிருவாக குறியீடுகளை அளவிடுவதற்கான போல்ட் உற்பத்தி
- திணைக்களத்தின் முகாம் பற்றிய ஆய்வுகளை முன்னெடுத்தல், முந்தைய முகாம்களை கழற்றுதலும் நிறுவுதலும்
- நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் பாதுகாப்பு மற்றும் தூய்மை தொடர்பில் வெளி நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- பிரதேச நில அளவையாளர் அலுவலகங்களை வாடகைக்கு எடுப்பதற்கான பொருத்தமான வர்த்தமானி அறிவிப்புகளைத் தயாரித்தல்
- திணைக்கள அடையாள அட்டைகளை திணைக்கள ஊழியர்களுக்கு வழங்குதல்.

செயலாற்றுகை

ரூபா 50,000.00 மேற்பட்ட புதிய கட்டுமானங்கள் மற்றும் பழுது பார்த்தல்கள்.

தொடர் இலக்கம்	செயற்திட்டம்	செலவினம் (ரூ.)
01	பாதுகாப்பு கண்காணிப்பாளர் அறைகளை மீள் திருத்தம் செய்தல்	84,360.00
02	இரண்டாம் மாடியின் மலசலகூட அமைப்பை பழுதுபார்த்தல்	1,692,000.00
03	நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் வடிகாலமைப்பை பழுதுபார்த்தல்	104,750.00

- தீயணைப்பு உபகரணங்களை மீள் நிரப்பி உரிய இடங்களுக்கு முறையான விதத்தில் வெற்றிகரமாக பொருத்தப்பட்டன.
- கிரிதலை பிரதேச நில அளவையாளர் அலுவலகத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டு உள்ளது.
- வருடாந்த முழு சேவை பட்டியலின் படி, சேவை தொழில்நுட்ப வல்லுநர்களால் 222 உபகரணங்கள் சேவைத்துறையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு நாள் சேவை செயற்பாடுகளை முன்னெடுப்பதன் கீழ் பூரண மானிகள் 18 சேவை செய்யப்பட்டு களத்திற்கு வெளியிடப்பட்டு உள்ளது.
- சேவை பழுது பார்த்தல் காரணமாகக் கிடைக்கின்ற மொத்தம் 139 பாகங்கள் பழுதுபார்க்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.
- நில அளவீட்டுக் கட்டுப்பாட்டுப் புள்ளிகளுக்காக C வகையைச் சேர்ந்த சுரையாணிகள் 3,900 தயாரிக்கப்பட்டு உள்ளன.

பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகள்

மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டு பூராகவும் இச்சேவையானது திணைக்களத்தின் உபகரணங்கள் மற்றும் கட்டிடப் பிரிவின் மேற்பார்வையின் கீழ் நிறைவேற்றப்பட்டு உள்ளது. முன்னோடி (பயனியம்) பாதுகாப்பு நிறுவனத்தினால் 2022 நவம்பர் மாத இறுதி வரையிலும் 2022 டிசம்பர் மாத ஆரம்பத்தில் இருந்து நெவர் பெக் பாதுகாப்பு நிறுவனம் பாதுகாப்பு கடமைகளை நிறைவேற்றி வந்ததுடன், நிபுனி சுத்திகரிப்பு நிறுவனத்தினால் 2022 ஜூலை மாதம் வரையிலும் ககன பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு நிறுவனத்தின் மூலம் 2022 ஆகஸ்ட் மாதத்தில் இருந்து திணைக்களத்தை சுத்தமாக மற்றும் கவர்ச்சிகரமானதாக பேணுதல் முன்னெடுக்கப்பட்டது.

5. பெறுகைகள் மற்றும் விநியோகப் பிரிவு

பணிகள்

திணைக்களத்தின் வருடாந்த பொருட்கள் மற்றும் சேவைத் தேவைகளின் கொள்முதல் செயல்முறையைப் பின்பற்றி, கொள்முதல் செய்தல் மற்றும் விநியோகித்தல், அனைத்து களஞ்சியங்களினதும் பேரேடுகளையும் முறையாகப் பராமரித்தல் மற்றும் வருடாந்த களஞ்சியங்களையும் ஆய்வுக்குட்படுத்தி ,மேற்பார்வை செய்து, கணக்கெடுப்பை கண்காணித்தல் மற்றும் அனுமதி வழங்குதல்.

செயலாற்றுகை

2022 ஆம் ஆண்டில் 02 மில்லியன் ரூபாயிற்கும் அதிகமான மூலதனக் கொள்வனவுகளும், 14 மில்லியன் ரூபாயிற்கு அதிகமான மீண்டுவரும் கொள்வனவுகளும், பிம்சவிய செயற்திட்டத்திற்காக 4 மில்லியன் ரூபாய் இற்கு அண்மித்த மீண்டுவரும் கொள்வனவுகளும் மேற்கொளப்பட்டு உள்ளன.

நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் பல்வேறு பிரிவுகள்,மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகங்கள், மாவட்ட நில அளவை அலுவலகங்கள் மற்றும் பிரதேச நில அளவை அலுவலகங்கள் மற்றும் நாடு பூராகவும் பரவிக் காணப்படும் நில அளவை உத்தியோகத்தர்களினால் பராமரிக்கப்பட்டு வரும் 787 களஞ்சியசாலைப் பேரேடுகளுக்குரிய களஞ்சியக் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன.

அவற்றிலிருந்து அரச நில அளவையாளர் 584 பேருக்கும் ,சகல மாகாண நில அளவையாளர்கள் அலுவலகங்களுக்கும் ,சகல மாவட்ட நில அளவையாளர் அலுவலகங்களுக்கும் , சகல பிரதேச நில அளவையாளர் அலுவலகங்களுக்கும் மேலும் தியத்தலாவ அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனத்தில் உள்ள களஞ்சிய அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ,சுற்றுலா பங்களா மற்றும் விடுமுறைக் களிப்பிடம் அனைத்திற்கும் ,நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலுள்ள அனைத்துப் பிரிவுகளுக்கும் 2021.12.31 திகதிக்கு அனுமதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கோப்புகள் தீர்க்கப்பட்டன. ஓய்வு பெற்ற மற்றும் பதவி விலகிய உத்தியோகத்தர்கள் 39 பேரிற்காக நிரந்தர தீர்வைகள் வழங்கப்பட்டு உள்ளன.

6. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

பணிகள்

இணையத்தளத் தொடர்பு மற்றும் மின்னஞ்சல் போன்ற மேம்பட்ட தகவல் பரிமாற்ற முறைகளைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு காணி பற்றிய தகவல்களை இணையம் வாயிலாக பெற்றுக்கொள்ளுதல் ,நிருவாக விடயங்களுக்கு உதவிச் சேவையாக மனித வள முகாமைத்துவம் ,தரவுகளைக் களஞ்சியப்படுத்துதல் ,தகவல்களை உடனுக்குடன் முறையாக பெற்றுக்கொள்வதற்காக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு தேவையான உதவிகளை வழங்குதல்.

செயலாற்றுகை

கீழ்வரும் தரவுத் தொகுதி மற்றும் மென்பொருள் 2022 ஆம் வருடத்தில் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

1. அளவை கோரிக்கைக்குரிய அமைவிடம் மற்றும் அதன் முன்னேற்றத்தை இணையத்தளத்தின் ஊடாக பரிசீலிக்க முடியுமான செயலி. (Requisition Location Searcher)




திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற அளவைக் கோரிக்கைகளின் அமைவிடம் மற்றும் அதற்குரிய அளவைத் தகவல்களை இற்றைப்படுத்துவதற்கும், அதனை பொது மக்கள் பார்வையிடுவதற்கும் முடியுமான விதத்தில் Web Services இல் Requisition Location Searcher என்ற பெயரில் இச்சேவை உள்ளடக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் பின்வரும் வசதிகள் கிடைக்கப் பெறும்.


Trace Your Requisition Status View Project

- திணைக்களத்தினால் நிறுவப்பட்ட கட்டுப்பாட்டுப் புள்ளிகளும், திணைக்கள அலுவலகங்களின் அமைவிடம், அளவைக் கோரிக்கைகளுக்குரிய தகவல்களுக்கு மேலதிகமாக இவ்வரைபடத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் அளவைக் கோரிக்கைகளுக்குரிய கள நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதற்கு இலகுவாக இருக்கும்.

- பூமிக்குரிய வரைபடத்தில் அமைந்துள்ள வேண்டியொரு புள்ளிகள் இரண்டிற்கு இடையில் உள்ள தூரத்தை அளத்தல், குறிப்பிட்டளவு நிலத்தின் பரப்பளவைக் கணித்தல், நிலத்தின் அமைவிடத்திற்குரிய உறுதியான புள்ளியில் இருந்து தேவைக்கு அமைய தீர்மானிக்கப்படுகின்ற தூரத்திற்கு உள்ளடங்குகின்ற அளவைக் கோரிக்கைகள் மற்றும் அது தொடர்பான விபரங்களைப் பார்வையிடுவதற்கு முடியும்.




2. இழப்பு மற்றும் சேதங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதை முகாமைத்துவம் செய்தல் (LDRS - Losses and Damages Report System)



களஞ்சியப் பொருட்கள், உபகரணங்கள், கட்டிடங்கள், ஆவணங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பாக இடம்பெறுகின்ற சேதங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதை மேற்பார்வையிட முடியும். இதன் மூலம் அறிக்கைகள் தாமதமடைதல் மற்றும் தவறுகள் நேர்வதைக் குறைப்பதற்கு மற்றும் அறிக்கைப் பரிமாற்றம் வினைத்திறனாக இடம்பெறுகின்றதா என மேல் நிர்வாகத்திற்கு இணையத்தளத்தின் ஊடாக கண்காணிக்க முடியுமான விதத்தில் இச்செயலி தயாரிக்கப்பட்டு உள்ளது.

3. கணினி முகாமைத்துவ முறைமை

நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் வன் பொருட்கள், மென் பொருட்கள் மற்றும் வலையமைப்பு தொடர்பான பழுதுபார்த்தல்கள் மற்றும் உரிய உதவிகள் அறிக்கைகளுடன் முகாமைத்துவம் செய்தல் மற்றும் கணினி மற்றும் உதிரிப் பாகங்களின் ஆதனங்களை முகாமைத்துவம் செய்வதற்கு இத்தரவு முறைமை வடிவமைக்கப்பட்டு உள்ளது.



நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்குச் சொந்தமான கணினி உதிரிப் பாகங்களின் அளவு தொடர்பாக ஒவ்வொரு கணினி மற்றும் உதிரிப் பாகங்களின் பழுது பார்த்தல்கள் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் நாள் ஒன்றில் செய்யப்பட வேண்டிய மீள் திருத்தங்களை முறையாக ஒழுங்குமுறையே செய்வதன் மூலம் வினைத்திறனை அதிகரிக்க முடியுமாக உள்ளது.

இவ்வாண்டு தகவல் தொழில்நுட்ப பிரிவின் மூலம் பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டு உள்ளன.

- பிரதான அலுவலகத்தின் கணினிகள் மற்றும் கணினி உதிரிப் பாகங்களுக்கான கணினி கோளாறுகளை சீரமைத்தல் மற்றும் அதற்கு அவசியமான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- பிரதான அலுவலகத்தின் கணினி வலையமைப்பு முறைமையின் முகாமைத்துவம் மற்றும் நடாத்திச் செல்லுதல்.
- மனித வள முகாமைத்துவ தரவு முறைமையை இற்றைப்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்டஇதர தரவு முறைமைகளை நடாத்திச் செல்லுதல் மற்றும் மேம்படுத்துதல்.
- திணைக்கள வலைத்தளத்தை இற்றைப்படுத்துதல் மற்றும் நடாத்திச் செல்லுதல்.
- பிரதான அலுவலகத்தின் நாளாந்த வருகை மற்றும் வெளியேறுகைகளை குறித்தல் மற்றும் திணைக்கள தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி விபரப் பட்டியல் தொடர்பான தகவல் தரவு முறைமையை நடாத்திச் செல்லுதல்.

7. புவிப்பாத்து நில அளவைக்கிளை

பணிகள்

முழு நாட்டையும் உள்ளடக்கிய செங்குத்து மற்றும் கிடைமட்ட புவிசார் அளவையியலைப் பராமரித்தல் மற்றும் புவிசார் கணக்கெடுப்பு, தரவு வங்கி பராமரிப்பு மற்றும் மேற்பார்வை தொடர்பான நடவடிக்கைகள்.

செயலாற்றுகை

வருடத்திற்குள் செய்யப்பட்ட விசேட அளவை தொடர்பிலான விடயங்கள்

தொடர் இலக்கம்	விடயங்கள்
1	கந்தர துறைமுகத்தின் கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுதல் (**N,E,Z** தொகுதி இலக்கம்)
2	JAICA உதவியின் அடிப்படையில் ஹாலியெலவை அண்டிய வீதியை சீரமைப்பதற்காக கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுதல் (**N,E,Z** தொகுதி இலக்கம்)
3	ருவன்புர அதிவேக நெடுஞ்சாலைச் செயற்திட்டத்திற்குரிய கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுதல் (02 ஆ கட்டம்) (**N,E,Z** தொகுதி இலக்கம்)
4	கும்புக்கன் ஓயா நீர்ப்பாசன செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுதல். (**N,E,Z** தொகுதி இலக்கம்)
5	முன்மொழியப்பட்ட வட மத்திய மாகாண கால்வாய் மார்க்க செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுதல் (NCP Canal Project) (**N,E,Z** தொகுதி இலக்கம்)
6	மாவட்டங்கள் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைய கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவும் நடவடிக்கைகள் (**N,E,Z** தொகுதி இலக்கம்)
7	ருவன்புர அதிவேக நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் அளவீட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் (02 ஆம் கட்டம்)
8	அலுபொல தோட்ட அளவீட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
9	கீரிகல தோட்ட அளவீட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
10	பிராமணகம முன்மொழிவுத் திட்டத்தின் கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுதல்.

ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட சேவைகள் வழங்கல்

தொடர் இலக்கம்	விடயங்கள்
1	உரிமம் பெற்ற நில அளவையாளர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு கட்டுப்பாட்டுப் புள்ளிகள் மற்றும் பீடக்குறிகளின் விபரங்களை வழங்குதல்.
2	SLCORSnet தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான சேவைகள், அரச நிறுவனங்களில் பயன்படுத்தும் 18 பேருக்கு மற்றும் அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் போன்ற தனியார் பிரிவைச் சேர்ந்த 26 பேருக்கு வழங்குதல். (இதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா. 1,454,740.00 ஆகும்.)
3	கட்டுப்பாட்டுப் புள்ளிகள் மற்றும் பீடக்குறிகளின் தரவுத் தொகுதியை இற்றைப்படுத்துதல்.

8. விஷேட நில அளவைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு

பணிகள்

புதிய தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி விசேட அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் அவசர நில அளவைத் தேவைப்பாடுகளை சிறப்பாக வழங்குதல் ,நிலத் தகவல்கள் தொடர்பில் சிக்கலான பிரச்சினைகளின் போது சுமுகமான முறையில் அவற்றைத் தீர்த்து ,மிகச் சிறப்பான முறையில் நிலத் தகவல்களை குறித்த பிரிவினருக்கு வழங்குதல் ,முழு நாடும் முகங்கொடுக்கும் அவசர அனர்த்தங்கள் நிகழும்போது பொதுமக்களுக்குத் தேவையான நிவாரணம் மற்றும் செயல்திறனை வழங்குதல் போன்ற தேசிய அபிவிருத்தி திட்டங்களுக்கான திணைக்களத்தின் சார்பாக முன்னோடியான பங்களிப்பினை வழங்குதல்.

செயலாற்றுகை

- குருணாகலை ஆடிகெதர தோட்டம் அளவிடுதல்
- இரத்மலானை விமான நிலையத்தை அளவிடுதல்
- பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தை கையகப்படுத்துவதற்காக அளவிடுதல்.
- புனித பூமிகளின் அளவையின் கீழ் கொட்டாஞ்சேனை பரமானந்த புராண விகாரை மற்றும் ஹுணுப்பிட்டிய கங்காராம விகாரை
- பெபிலியான சுனேத்ரா தேவி விகாரை மற்றும் முல்லைத் தீவு குருந்தி விகாரையை அளவிடுதல்.
- கொழும்பு தாமரைக் கோபுரத்தை அளவிடுதல்.
- கொழும்பை அண்டியுள்ள பாடசாலைகள் 08 ஐ அளவிடுதல்.
- மாவட்ட மீன்பிடி முகாமைத்துவ வலய எல்லைகளை நிர்ணயிப்பதற்கான அளவைகள்.
- நீதிமன்ற அளவைகளின் கீழ் மைனாகோகம, கோடாகோகம, ஜனாதிபதி மாளிகை வளாகம், ஜனாதிபதி பிரத்தியேக இல்லம், பிரதமர் அலுவலக வளாகத்தை அளவிடுதல்.
- இலங்கை விமானப் படைக்கு திசைகாட்டி இயந்திரம் ஒன்றை நிறுவுதல்.
- ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை அஞ்சல் அலுவலக வளாத்தை அளவிடுதல்.
- பலாலி விமான ப் படை முகாமின் சுவட்டு வரைவை தயாரித்தல்.
- இரத்மலானை விமான நிலையத்தின் 02 ஆம் கட்ட அளவைகள்.
- நீதிமன்ற GPS உபகரணங்களை பகுப்பாய்வு செய்தல்.
- தோட்ட அளவைகளின் கீழ் ஹெயர்பார்க் - ஹுன்னஸ்கிரிய, புஸ்ஸல்ல - எஹலியகொட, ஆகரபத்தன - ஹப்புத்தளை ஆகிய தோட்டங்களை அளவிடுதல்.
- புத்தளம் கடலேரியை அளவிடுதல்.
- இலங்கை அமெரிக்கா தூதரகத்திற்குச் சொந்தமான காணியை அளவிடுதல்.
- எண்ம நிலப்படத்தை தயாரித்தல் அடிப்படை நிலப்படங்கள் 161 (கொழும்பு நகர எல்லையில்)
- கொடகம ஹங்வெல்ல வீதியின் இரு மருங்குகளிலுள்ள பழைய எல்லைத் தரவுகளை மேல்பொருத்தி முறைமூலம் காட்டுதல்.

2022 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட நிறைவு செய்யப்பட்ட அளவீடுகள் மூலம் ரூ. 17,499,511.96. அரசாங்கத்திற்கு வருமானம் ஈட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது

9. புவியியல் தகவல்கள் கிளை

9.1 வான் அளவைகள் பிரிவு

பணிகள்

- வான்வழிப் ஒளிப்படங்கள், செய்மதிப் ஒளிப்படங்கள், UAV மற்றும் LiDAR தரவுகளைப் பயன்படுத்தி படமாக்கல் மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவசியமான தரவுகளைச் சேகரித்தல்.
- தரவின் அடிப்படையிலான அதிக செம்மையுடன் கூடிய உயர் தரத்திலான மற்றும் நம்பகத் தன்மை மிக்க புவியியல் தரவுகளை வழங்குதல்.
- வரைபடமாக்கல் தேவைகளுக்கான வான் ஒளிப்படங்களை வழங்குதல்.
- கோரிக்கைகளுக்கு அமைய வான் ஒளிப்படங்களை எண்ம மாதிரியில் மீள் உற்பத்தி செய்தல்.
- ஆவணக் காப்பிற்காக வான்ஒளிப்படங்களை நுணுகி நோக்கல்.

செயலாற்றுகை

2022 வருடத்தினுள் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்

- செய்மதி ஒளிப்படங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி பத்திரங்கள் 172 இற்றைப்படுத்தப்பட்டன. (6888 சதுர கிலோ மீட்டர்).
- வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைய LiDAR point clouds தயாரித்து DSM வடிவமைத்தல் (17 சதுர கிலோ மீட்டர்)
- வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைய LiDAR point clouds ஆக தரவுகளை வெளியிடுதல் - 8863.97 சதுர கிலோ மீட்டர், DEM- 1785 சதுர கிலோ மீட்டர், உருவரைக் கோடுகள் - 7874.5 சதுர கிலோ மீட்டர், Rapid Ortho Images-1155 சதுர கிலோ மீட்டர்
- வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைய வான் ஒளிப்படங்கள் 180 மீள் அச்சிடுதல்.
- வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைய வான் ஒளிப்பட எண்மத் தரவுகள் 447 வெளியிடுதல்.
- பாதுகாப்புச் செயற்பாடுகளுக்காக ஆகாய மார்க்கமான வான் ஒளிப்படங்கள் 3023 இன் படல சுருள் (எதிர்மறை/ நேர்மறை) நுணுகி (Scanning) நோக்குதல்.

9.2 தொலையுணர்வுக் கிளை

பணிகள்

இலங்கை முழுவதையும் உள்ளடக்குவதற்கு, உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக் கோள் படங்களைப் பயன்படுத்தி 1:50,000 இட விளக்கவியல் படங்களை எண்மத் தரவு முறைமையை தரவேற்றுதல் மற்றும் தரவேற்றிய தரவினை 1:50,000 வரைபடத்திற்காக வழங்குதல்.

மேற்குறிப்பிட்ட உயர் தெளிவுத்திறன் கொண்ட செய்மதிப் படங்களைப் பயன்படுத்தி 1:10,000 இட விளக்க எண்மத்தரவு முறைமையை இற்றைப்படுத்துதல் மற்றும் மேலும் மேம்படுத்துதலை முன்னெடுப்பதற்காக இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளை புவியியல் தரவு முறைமைப் பிரிவிற்கு வழங்குதல்.

செயலாற்றுகை

- இலங்கையின் தென் மாகாணத்தின் 39017 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பை உள்ளடக்குவதற்காக உயர் தெளிவுத்திறன் கொண்ட செய்மதிப்படங்களைப் பயன்படுத்தி இவ்வாண்டு 1:50,000 வரைபட தொடரில் 46 பத்திரங்களை இற்றைப்படுத்துதல் பூரணப்படுத்தப்பட்டு உள்ளன.
- 5223 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பை உள்ளடக்குவதற்காக உயர் தெளிவுத்திறன் கொண்டகூடிய செய்மதிப் படங்களைப் பயன்படுத்தி இவ்வாண்டு 1:10,000 வரைபட தொடரில் 144 பத்திரங்களை இற்றைப்படுத்துதல் பூரணப்படுத்தப்பட்டு உள்ளன.

9.3 புவியியல் தகவல் முறைமைப் பிரிவு

பணிகள்

தேசிய தேவைகளையும், பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் நில அளவைத் திணைக்களத்தின் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்வதற்காக, புவியியல் தகவல் முறைமை ஒன்றினை உருவாக்குதல், தரவுகளை சேசகரித்தல், பராமரித்தல், புதுப்பித்தல் மற்றும் அதனைப் விநியோகித்தல் .

செயலாற்றுகை

1: 10,000 அளவான தொடர்ச்சியான இட விளக்கத் தரவு முறைமையை வடிவமைத்தல்.

- 1: 10,000 பத்திரத்தின் 7520 சதுர கிலோ மீற்றரின் 3.2 பிரதியின் புவியியல் தகவல் முறைமை செயற்பாடுகளை பூரணப்படுத்துதல்.
- 1: 10,000 தரவு முறைமைக்காக தொடர்ச்சியான தரவுகளைத் தயாரித்தல்.
- 1:10,000 தரவு முறைமையைப் பயன்படுத்தி நாட்டின் பரப்பளவை மீண்டும் கணக்கிடுதல் மற்றும் தொகுத்தல்.
- GN மற்றும் DS தரவு முறைமைகளுக்கு இருப்பிடக் குறியீட்டு இலக்கம் இடுதல்.

கோரிக்கைகளுக்கு அமைய நிகழ்நிலை தரவுச் சேவை வழங்குதல்.

- SD தரவு முறைமையின் மூலம் தரவு அடுக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக NSDI தரவு மாதிரிக்கு Python பிரதிகள் வடிவமைக்கப்பட்டன.
- திணைக்களம் சார் தரவுத் தள முறைமையை பூரணப்படுத்தி இணைய சேவையாக வெளியிடப்பட்டது.
- இணைய சேவையை இற்றைப்படுத்துதல் மற்றும் வைத்தியசாலை இணைய சேவைகள், பாடசாலை இணைய சேவைகள், GN இணைய சேவைகள், குளங்களின் இணைய சேவைகள் தொடர்பான இணைய செயலி மற்றும் பிரதேச திணைக்களத்தை நிறுவுதல் மற்றும் வடிவமைத்தல்.
- இலங்கையின் நிர்வாக எல்லைகளை இற்றைப்படுத்தி பதிப்புச் செய்தல்.
- அகில இலங்கையையும் உள்ளடக்குவதற்காக 1:10,000 மற்றும் 1:50,000 வலையமைப்பு முறைமையை வெளியிடுதல்.

10. வரைபடமாக்கல் பிரிவு

பணிகள்

திணைக்களத்தின் பணிகளில் முக்கிய பிரிவான அபிவிருத்தி விடயங்களுக்குத் தேவையான இட விளக்கவரைபடம் மற்றும் பல்வேறு விடயங்களின் கீழ் குறிக்கோள் வரைபடத்தை உருவாக்குதல், நுகர்வோரின் வேண்டுகோளின்படியும் வரைபடங்களை உருவாக்குதல், வரை படங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து உற்பத்திகளையும் அச்சிடுதல் மற்றும் எண்தரவு முறையில் கொள்வனவு செய்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துதல். இதற்கு மேலதிகமாக தியத்தலாவ அளவையியலும் படமாக்கலும் நிறுவனத்தின் மற்றும் சகல மாவட்ட அலுலகங்கள் மூலம் அனைத்து அச்சிடப்பட்ட வரைபடங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் கூரியர் சேவையின் (Courier Service) மூலமும் வாடிக்கையாளர்களுக்கு வபைடங்கள் மற்றும் எண்மத் தரவுகளை வீட்டிற்கே வரவழைத்துக் கொள்ளும் வசதிகள் பிரதான அலுவலகத்தின் வாடிக்கையாளர் சேவை மத்திய நிலையத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

செயலாற்றுகை

பிரதேசவியல் வரைபடங்களை வரையும் பிரிவின் ஊடாக பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்

- 1:50,000 வரைபடக் கோவையின் இரண்டாம் பதிப்பின் கீழ் 05 வரைபட மறுசீராய்வுகள்
- பிரதேச செயலாளர் தொகுதிகளின் 62 வரைபடங்கள்
- பொதுமக்களின் தேவைப்பாட்டின் அடிப்படையில் 1:10,000 அளவிலான 108 வரைபடங்கள்

குறிக்கோள் வரைபடங்கள் பிரிவின் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்

- 02 மாவட்ட வரைபடங்கள். [2ம் பதிப்பு]
- 18 வீதிகள் மற்றும் நகர வரைபட கையேடு. [2ம் பதிப்பு]
- காலத்திற்கேற்ற இடஞ்சார் தரவு முறைமையின் மூலம் வடிவமைக்கப்பட்ட 01 வரைபடம்
- 01துறைமுக நகர வரைபடம்
- முப்பரிமான கணிப்பான் மூலம் இடஞ்சார் தரவுகளை காலத்திற்கேற்ப வடிவமைக்கப்பட்ட 01 வரைபடம்
- இடஞ்சார் தரவுகளை காலத்திற்கேற்ப உருவரைக் கோடுகள் மூலம் வடிவமைக்கப்பட்ட 02 வரைபடங்கள்

விஷேட வரைபடங்கள் பிரிவின் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்


- வாடிக்கையாளர்களின் கோரிக்கைக்கு அமைய தயாரிக்கப்பட்ட 1467 வரைபடங்கள்

தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்

- பிரதேசவியல் விளக்க வரைபடங்கள் (வரைதல்) கிளை, விஷேட வரைபடங்கள் வரைதல் கிளை, குறிக்கோள் வரைபடக்கிளைகளின் வரைபடங்களின் தரக்கட்டுப்பாடுகளை கண்டறிதல்

2021 ஆம் ஆண்டில் வரைபடங்கள் தயாரிப்பின் முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளது.

வரைபடங்களின் வகைகள்	அலகு	வருடாந்த இலக்கு	பெற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றுகை
பொது மக்களின் கோரிக்கைக்கு அமைவாக 1 : 10,000 வரைபடங்களைத் தயாரித்தல்.	வரைபடங்களின் எண்ணிக்கை	36	108
1:50,000 பிரதேசவியல் விளக்க ங்கள் (இரண்டாவது பதிப்பு – மீளாய்வு)		06	05
நுகர்வோர் வரைபடங்கள்		660	1,467
குறிக்கோள் வரைபடங்கள்		24	33
பிரதேச செயலாளர் பிரிவு வரைபடங்கள்		60	62
1:50,000 தொடத் தரவு முறைமையின் பிழைகளை நீக்குதல்.	வரைபடங்களின் எண்ணிக்கை	18	18



வரைபடங்களை விற்றல்

அச்சு வரைபடங்கள், எண்ம வரைபடங்கள் மற்றும் தரவுகளை விற்பனை செய்வதன் மூலம் மற்றும் ஆக்கியோன் பங்கை அறவிடுவதன் மூலம் பின்வருமாறு வருமானங்கள் ஈட்டப்பட்டுள்ளன .

நில அளவையாளர் நாயக அலுவலகம்		
அச்சு வரைபடங்களை விற்பனை செய்தல்	=	ரூபா. 2,552,547.50
நுகர்வோரின் தேவைப்பாட்டிற்காக விஷேட வரைபடங்களை விற்பனை செய்தல்	=	ரூபா. 1,681,980.60
எண்மத் தரவுகளின் மூலம் பெற்ற வருமானங்கள்	=	ரூபா. 2,485,161.18

நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனம், மாவட்ட நில அளவை அலுவலகங்கள் மற்றும் அச்சு வரைபடங்களை விற்பனைசெய்தல்	=	ரூபா. 1,664,675.00
வரைபடங்கள் ,இலக்க வரைபடங்கள் மற்றும் இலக்கத் தரவின் மூலம் முழு இலாபம்	=	ரூபா. 8,384,364.28

வரைபடமாக்கல் பிரிவினூடாக மேற்கொள்ளப்பட்ட விஷேட பணிகள்

- நில அளவை வரைப்படங்களின் வர்ண அச்சுப்பதிப்பு அலகு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளான Layout தயாரித்தல், மற்றும் ஏனைய திணைக்களத் தேவைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்குரிய அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது.
- புத்தகங்கள் கட்டும் பிரிவின் மூலம் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளில் களப் புத்தகங்கள் மற்றும் பேரேடு கட்டுதல் பிரதான செயற்பாடாக அமைவதுடன் பணிகளானது துண்டுகளின் அளவிற்கு அமைய அனைத்து பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகளில் விசேட செயற்பாடுகளில் கீழ்வரும் புத்தகங்கள் மற்றும் பேரேடுகள் கட்டுதல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வெளிக்களப் புத்தகங்கள்	-	4850	(வெளிக்களப் புத்தகங்கள், மட்டம் புத்தகங்கள்)
புத்தகம் கட்டுதல்	-	64	
வரைபடங்கள் ஒட்டுதல்	-	3	
PE பேரேடு	-	80	

இந்த ஆண்டில் கீழ்வரும் அளவுகளில் வரைபடங்கள், புத்தகங்கள் மற்று மாதிரிப் படிவங்கள் அச்சிடஆவன செய்யப்பட்டன.

வகை	புத்தகங்கள், தாள்கள் அல்லது வரைபடங்களின் பிரிவு எண்ணிக்கை	அச்சிடப்பட்ட அளவு
பயணிகள் வரைபடங்கள்	01	2,500
நகர வரைபடங்கள்	03	2,500
50K வரைபடப் பகுதிகள்	09	15,000
இராணுவத்தினருக்காக கட்டத் தாள்கள்	09	1,142
50K வரைபடங்களை மீள அச்சிடல்	33	16,500
கால் ¼ களத்தாள்	01	15,600
காணி விபரப் பட்டியல்	01	46,000
படத் தாள்	01	5,000
கடிதத் தலைப்புக்கள் (நில அளவையாளர் நாயகம் அலுவலகம்)	01	5,000
கடிதத் தலைப்புக்கள் (வெளிக்கள அலுவலகம்)	01	8,000
EDM பக்கங்கள் / வெளிக்கள புத்தகப் பக்கங்கள்	4742	33,200
வெளிக்கள புத்தகத்தின் உள் முகப்புப் பக்கங்கள்	5000	5,000
திணைக்களப் படிவம்	31	120,630
களஞ்சியப் பேரேடு	04	420
PE பேரேடு	80	4,000
ஏனைய புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள்	335	-
கோட்டு (outline) வரைபடங்கள்	03	6,000
பிற வரைபடங்கள்	04	1,500

11. புவியியல் பெயரீட்டுப் பிரிவு

பணிகள்

இலங்கை மக்களின் கலாச்சார உரிமையுடன் பின்னிப் பிணைந்துள்ள தேசிய ஒற்றுமைக்கு துணைபுரியும் சரியானதும், உறுதியானதுமான புவியியல் பெயர்கள் மற்றும் தரவுகள் கட்டமைப்பு ஒன்றினைத் தரப்படுத்தலின் ஊடாக அறிமுகம் செய்தல்.

செயலாற்றுகை

- புவியியல் பெயர்கள் வலைத்தளம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பொதுமக்களின் கருத்துக்கள் 531 ஐ இற்றைப்படுத்துதல்
- புவியியல் பெயர் தரவு முறைமையின் புவியியல் பெயர்கள் 127,875 ஐ உரோமானிய மயப்படுத்தல்
- புவியியல் பெயர் தரவு முறைமையின் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் புவியியல் பெயர்கள் 209 ஐ திருத்தியமைத்தல்.

செயற்பாடுகள்	அலகு	வருடாந்த இலக்கு	பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம்
இணையத் தரவு முறைமை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பொது மக்களின் கருத்துக்களை உள்ளடக்குதல்	பொது மக்களின் கருத்துக்களின் எண்ணிக்கை	600	531
புவியியல் பெயரீட்டுத் தரவு முறைமையின் புவியியல் பெயரீடுகளை உரோமானிய மயப்படுத்துதல்	புவியியல் பெயரீடுகளின் எண்ணிக்கை	96,000	127,875
சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் புவியியல் பெயரீடுகளை திருத்தியமைத்தல்	புவியியல் பெயரீடுகளின் எண்ணிக்கை	120	209

12. ஆவண முகாமைத்துவம் மற்றும் தொழில்சார் தரங்கள் கிளை

பணிகள்

இந்தக் கிளையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள அதிகமான பழைய நிலப்படங்களின் குறி வரைபடங்கள் பொதுமக்களின் வேண்டுகோளின் பேரில் வழங்குதல், இந்தக் கிளையில் பட்டியலிடப்படுகின்ற, துறையில் மேற்கொள்ளப்படுகின்ற அளத்தல்களின் பின்னர் தயாரிக்கப்படுகின்ற அனைத்து சட்டரீதியான நிலப்படங்களினதும் சான்றளிக்கப்பட்ட பிரதிகளும் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற அளத்தல் நடவடிக்கைகள் மூலம் இற்றைப்படுத்தல் பராமரிக்கப்படுதல், காணிகளுக்கான பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான இறுதி கிராம நிலப்படத்தைத் தயாரித்தல்.

செயலாற்றுகை

12.1. உரித்துக்கள் தொடர்பான நில வரைபடங்களின் பிரதிகளை வழங்குதல்

உரித்துக்கள் தொடர்பான நில வரைபடங்கள் மற்றும் ஏனைய நில வரைபடங்கள் என்பன வழங்கப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை	-	1898

மேற்படி பிரதிகள் வழங்கப்பட்டதனால் ரூ. 2,540,950.00 தொகை ஈட்டப்பட்டு உள்ளது.

12.2. மாவட்டநில அளவை அலுவலகத்தால் வழங்கப்பட்டகோட்டு வரைபடத்தின் விமர்சனத்தை ஆவணக் காப்பகத்தில் உள்ள பதிவேட்டில் பதிந்து, குறித்த காணி தொடர்பான விவரங்களின் பட்டியலை இற்றைப்படுத்தல்.

தீர்வு வழங்கப்பட்ட வரைபடங்கள் (S)	-	590
முழுமையாக கைம்மாற்றப்பட்டகாணிகளின் தகவல்கள் மற்றும் தீர்வு வழங்கப்பட்ட கோட்டு வரைபடக் குறிப்புகள் (O மற்றும் V)	-	1233
குத்தகை வரைபடங்கள் (L)	-	590
பொது மக்களுக்கு வழங்கப்பட்ட சுவட்டுவரைபடங்களின் எண்ணிக்கை	-	3451
பொது மக்களுக்கு வழங்கப்பட்ட உண்மை நிழற் பிரதிகளின் எண்ணிக்கை	-	41857
கா.அ. ச.இன் கீழ் வழங்கப்பட்ட வரைபடங்களின் எண்ணிக்கை	-	1757

12.3. நீதிமன்ற ஆணைக்குழு கட்டளை அளவைகளின் ஒருங்கிணைப்புகள்.

